"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக்காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்" தாபிதம் : 1876

சத்தியவேத
# பாதுகாவலன்

தந்தி : "கதலிக் பிறஸ்" யாழ்ப்பாணம். தொலைபேசி : 300
REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

மலர் 87 | யாழ்ப்பாணம் 1962-ம் ஆ. ஆடிமீ 29-ம்வ. ஞாயிற்றுக்கிழமை — பிரதிசதம் 10 | இதழ் 30

மரியாயின் சைனிய வெள்ளிவிழா விசேஷ அநுபந்தத்தை உள்ளே காண்க.

# மரியாயின் சைனிய வெள்ளி விழா

இலங்கையில் மரியாயின் சைனியம் ஆரம்பிக்கப்பட்டு இருபத்தைந்தாண்டுகள் கடந்துவிட்டன. இக்காலத்தில் இலங்கைத்திருச்சபை அதிகாரிகளுடன் இரட்சணிய அலுவலில் தோளோடு தோள்நின்று ஒத்துழைத்த பின் வெள்ளிவிழாவைக் கொண்டாடும் மரியன்னையின் சைனியத்தினரைப் பாதுகாவலன் மனமார வாழ்த்துகிறுன். கடந்த காலத்திலும்பார்க்க எதிர்காலம் மேடுபள்ளங்கள் பல நிரம்பியது என்பதைச் சைனியத்தோருக்கு நினைவுறுத்துகிறுன். அவற்றையெல்லாம் திடமனதுடன் எதிர்த்துப் போராடத் திவ்விய இஸ்பிரீத்துவின் ஞான வரங்களும், மரியன்னையின் வழிநடாத்துகையும் சேனையாளருக்குக் கிடைக்கவேண்டுமெனப் பிரார்த்தித்து, சேனையாளர் அனைவருக்கும் பாதுகாவலன் மீண்டும் யூபிலிச் சோபன வாழ்த்துக்களைச் சமர்ப்பிக்கிறுன்.



## கத்தோலிக்க வைத்தியர் மகாநாடு

உலகின் பல்வேறு நாடுகளிலிருந்து 800 கத்தோலிக்க வைத்தியர் உவெஸ்ற்மினிஸ்ரரில் நடந்த சர்வதேச கத்தோலிக்க வைத்தியர் சங்கத்திற்குச் சமுகமளித்தனர். "மாறும் சமுதாயத்தில் கத்தோலிக்க வைத்தியனின் நிலை" என்பதைப் பீடிகையாக எடுத்துக்கொண்ட இம் மகாநாடு உவெஸ்ற்மினிஸ்ரர் மேற்றிராசான ஆலயத்தில் பாடற் பூசையுடன் ஆரம்பமாயது.

சுதந்திரம்பெறும் நாடுகளில் குமரப்பருவப் பிரச்சினைகள், வயோதிகம், மனநோயாளர் வைத்தியம் என்பன ஆராயப்பட்ட விடயங்களிற் சில.

இங்கிலாந்துக் கத்தோலிக்க வைத்தியர் சங்கம், ஞானஅதிகாரிகள், லண்டன் மாநகரசபை, கொம்மன்ஸ் சபை முதலியன சங்க அங்கத்தவருக்கு வரவேற்பளித்தன.

அறிவும் கத்தோலிக்க உணர்ச்சியும் நிறைந்த வைத்தியன், திருச்சபையின் மாருத போதனையையும் ஒழுக்கமுறையையும் அடிப்படையாகக்கொண்டு, தனது சகாக்களுக்கும் நோயாளருக்கும் நற்சேவை புரிவதற்கு வைத்தியத்துறை வசதியளிக்கிறது எனக் கூறி, பரிசுத்த பாப்பு ஆசிச் செய்தி அனுப்பியிருந்தார்.

## புரட்சியை எதிர்பாராதீர் !

வத்திக்கான் சங்கத்திற்குப்பின் திருச்சபையில் புரட்சிகரமான மாற்றங்களை எதிர்பார்க்கக்கூடாதென, போர்த்துக்கால் மேற்றிராணிமார் பாத்திமாவில் கூடிய கூட்டத்திற்கு முன் விடுத்த நிருபத்தில் கூறியிருக்கின்றனர்.

திருச்சபை தன் நிலை அற்றுப் போகத்தக்கதாக மாற்றங்களைச் செய்ய முடியாது. மேலும் இவ்வுலகத்தைப் பாதிக்கும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஓர் வழி எனவும் எண்ணலாகாது.

## மலையாள மொழியில் பூசை

இந்தியாவில் சீரியமலபார் ரீதியைச் சார்ந்த ஏழு அதிமேற்றிராணிமார்களும், பூசைவழிபாட்டில் இதுவரை உபயோகித்து வந்த சீரிய மொழிக்குப் பதிலாக மலையாள மொழியை உபயோகிக்கும்படி நிருபம் விடுத்திருக்கின்றனர். பூசைக் கிருத்தியத்திலும் மாற்றங்கள் செய்திருக்கின்றனர். இவை பரிசுத்த ஸ்தானத்தின் அங்கீகாரம் பெற்றிருக்கின்றன.

ஒற்றை முழங்கால் மடித்தல் தவிர்க்கப்பட்டுள்ளது; ஆசாரிய உடைகள் சீரிய பழமையைத் தழுவியதாக்கப்பட்டிருக்கின்றன. பரிசாரகரும் சபையாரும் குருவுடன் சேர்ந்து பூசையில் செபிக்கக்கூடியதாகப் பூசைப்புத்தகம்

( 4-ம் பக்கம் பார்க்க )

## மரியாயே !

மாமன்னன் தாவீது மரபிற்கோ ரணியே!
    மன்னுபே ரின்பவா னெளிபொங்கு மணியே!
பூமீது மாசற்ற புனிதபூ ரணியே!
    பூசிதத் தாயனம் மாதந்த கனியே!
ஆராத திருஞான மழைபெய்கா ரணியே!
    அண்டினோர்க் கருள்சுரந் தாளூமூ றணியே!
தேவாதி தேவனை ஈன்றராக் கினியே!
    தீனரெந் துணையான மரியாயே வாழ்க!

●

நித்தியங் கன்னிமை நிமிர்கின்ற சுடரே!
    நிகரற்ற மாதவச் சூசையின் துணையே!
முத்தியின் வாசலே! மோனப்பொன் முடியே!
    மோதுதுயர் வேளையின் ஆதரப் புணையே!
சத்தியத் தம்பமே! தண்ணளித் தடமே!
    சாந்தியொளி கான்றொளிரு முதயதா ரகையே!
அத்தியந்த பத்தியுடைத் தானபாத் திரமே!
    அன்பினுரு வானதாய் மரியாயே வாழ்க!

●

தங்கமதி பாதவிணை தாங்குதிருத் தாயே!
    தாரகைக ளால்மகுடம் வாய்ந்த திருச்செல்வீ!
பொங்குகதி ராடையினைப் போர்த்ததவப் பொன்னே!
    பூமுகத்தி லற்புதங்கள் பொழியுமெழில் முகிலே!
மங்களஞ்சேர் மணிமாலை மலர்க்கரங் கொண்டாய்!
    மாதரசி! மண்ணுலக விண்ணுலக ராணீ!
அங்கமெலாம் வாயாயுன் னதிமதுர நாமம்
    அடியார்கள் போற்றுதிரு மரியாயே! வாழ்க!

"ஜெயம்"

வாழ்க!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாண்டவன்வெளிச் செய்தி

## பூசைப் பரிசாரகர் தினம்

தாண்டவன் வெளிப் பூசைப்பரிசாரகர் சபைப்பிள்ளைகள் தாங்கள் சபைத் தினத்தைக் கடந்த புதன்வாரம் கொண்டாடினர். அன்றுகாலை இச் சபையின் பாதுகாவலராகிய அர்ச். ஞானப்பிரகாசியாருக்குத் தோத்திரப் பாடற்பூசையும், மாலை சதாசகாய மாதாநோவனை வைபித்து அவற்றில் பங்குபற்றி அர்ச். ஞானப்பிரகாசியாரின் ஆசிரும்பெற்றனர். சகலஆராதனைகளும் வண. ஜோர்ஜ் ஈ. எல். வம்பேக் சுவாமிஅவர்களால் நடாத்தப்பட்டுச் சபையினருக்குத் திருக்கா ஆசீரும் அளிக்கப்பட்டது.

அன்றுதினம் இப்பூசைப்பரிசாரகர் சபையில் அங்கத்தவர்களாய் இருந்து தற்போது திருகோணமலை — உப்புவெளி ஆரம்ப குருமடத்தில் சேர்ந்திருக்கும் கனிஷ்டர் சில்வேஸ்ரர், இரட்னஜோதி பிரான்சிஸ், செலஸ்ரின் பாத்திலட், கிளிற்றஸ் இம்மனுவல், காட்வின் லம்பட்ஆகிய சகோதரரிடம் இருந்து இவர்களுக்குக்கிடைத்த "தாண்டவன் வெளி அர்ச். ஞானப்பிரகாசியார் பூசைப்பரிசாரகர் சபையினரான இப் பங்கில் மேன்மேலும் முன்னேறவும், அதில் உள்ள எம் சகோதரர்கள் கலையாது, தளராது மேலும் சேவைசெய்யவும் இச்சபையில் இருந்து மேலும் நண்பர்கள் எங்கள் மத்தையில் சேரவும் எல்லாம்வல்ல இறைவனையும், தேவதாயாரையும், அர்ச். ஞானப்பிரகாசியாரையும் வேண்டுகின்றோம்" என்னும் வாழ்த்துச் செய்திகண்டு இப்பூசைப் பரிசாரகர் மிகவும் சந்தோஷப்பட்டதுமல்லாமல் அன்றுதினம் மேலும் சகோதரர்கள் மனம்விரும்பி ஆரம்ப குருமடத்திலசேர உதவிசெய்யும்படி அர்ச். ஞானப்பிரகாசியாரை மன்றுடினர். அருள்பெறுக ஆரம்ப குருமடமாணவர்கள்! வளர்க அர்ச். ஞானப்பிரகாசியார் பூசைப்பரிசாரகர் சபை!!

## யேசுவின் திருஇருதய மகிமைக் காப்பாளர் ஆண்டுவிழா 1962

இவ்வருடம் மேற்படி சபையினர் தங்கள் ஆண்டுவிழாவைக் கடந்த ஞாயிற்றுக்கிழமை வெகுசிறப்பாகக் கொண்டாடினர். விழாவுக்கு முந்திய நாள் சனிவாரம் காலை யேசுவின் திருஇருதயத்துக்கு நன்றியறிதலாகச் செபமாலை, பிரார்த்தனை, பிரசங்கம், யேசுவின் திருஇருதய மாலையாராதனை, திவ்வியநற்கருணை ஆசீர்வாதம், திருஇருதய சுற்றுப்பிரகாரம் நடந்தேறியது. விழா அன்றுகாலை ஏழு மணிக்குத் தோத்திரப் பாடற்பூசை வண. கட்டளைக்குரு ஜோர்ஜ் ஈ. எல். வம்பேக் சுவாமி அவர்களால் நிறைவேற்றப்பட்டது. இல்லங்களில் திருஇருதய ஸ்தாபகம்பற்றிப் பிரசங்கமும் சொல்லப்பட்டது. பூசைமுடிவில் இச்சபையில் புதிய அங்கத்தவர்கள் சேர்க்கப்பட்டுச் சின்னங்களும் வழங்கப்பட்டது. பின் சபையினர் அனைவரும் குருமனைசென்று கட்டளைக்குருவரைச் சந்தித்து வாழ்த்துக்கள்கூறி ஞாபகார்த்த படங்களும், திருக்கா ஆசிரும் பெற்றனர். அத்துடன் கட்டளைக் குருவானவரையும், சபையினரையும் வைத்துப் பிரிமைப்படம். எடுக்கப்பட்டது.

அன்றுமாலை வருடாந்தப் பொதுக் கூட்டம் நடாத்தப்பட்டுக் காரியதரிசி, தனாதிகாரால் அண்டறிக்கை, கணக்கறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டது. இச்சபையின் ஞானத்தலைவராகிய கட்டளைக்குருவர் கடந்த வருடத்தில் இச்சபை ஆற்றிய தொண்டுகளைப்பற்றிப் பாராட்டிப் பேசினர். புதவருடத்தியோகத்தர்களாகப் பிரான்சிஸ் யோசப் தலைவராகவும், லோறன்ஸ் பொனுட்டோ உபதலைவராகவும், வே. மார்க்கு காரியதரிசியாகவும், கே. யோசப் உபகாரியதரிசியாகவும், எஸ். குசைப்பிள்ளை தனாதிகாரியாகவும், திருவாளர்கள் பொ. செல்லத்துரை, பீ. ஆர். யோசப், என். சபாரெட்னம் சபை ஆலோசகர்களாகவும் தெரிவு செய்யப்பட்டனர். ஈற்றில் இராப்போசனத்துடன் விழா சிறப்பாய் முடிந்தது.

## பிரிவுபசாரக் கொண்டாட்டம்

அக்கரைப்பற்று, பரி. ஆரோக்கிய மாதா கோவில் பங்கைச்சேர்ந்தவரும், மட் - கருங்கொடித்தீவு றோ. க. மி. க. பாடசாலைஆசிரியருமான திரு. அ. மனுவேற்பிள்ளை வேலுப்பிள்ளை மேற்படி பாடசாலையில் 37 வருடங்கள் சேவை செய்து 15-7-62இல் இளைப்பாறியுள்ளார். அன்னாரின் அளப்பரிய சேவையை முன்னிட்டு 13-7-62 மு. ப. 9–30 மணிக்குப் பாடசாலை மண்டபத்தில் அதிவண. கோட்பிறிகுக் சுவாமியார் அவர்களின் தலைமையின்கீழ் ஒரு பிரிவுபசாரக் கொண்டாட்டம் நடந்தேறியது.

பாடசாலைத் தலைமைஆசிரியர் உயர் திரு. க. மு. ஞானப்பிரகாசம் அவர்கள் பிரிவுபசாரகரை மாலையிட்டு வரவேற்று நின்றார். அக்கரைப்பற்றிலுள்ள ஆசிரியசமுதாயத்தை உருவாக்கும் பணியில் அயராதுஉழைத்துக்களைத்த திரு. அ. ம. வேலுப்பிள்ளை ஆசிரியர் புன்முறுவல்பூத்தமுகத்துடன் ஆசனத்தில் அமர்ந்தார். முதன்முதல் பிரிவுபசார வாழ்த்துப்பத்திரம் வாசித்து வழங்கப்பட்டது. பாடசாலை மாணவமாணவிகளால் பாமாலைகள், கதம்பநிகழ்ச்சிகள் பரதநாட்டியங்கள் நடாத்தப்பட்டன. ஆசிரியர்பலரால் அன்னாரின் சேவையின் மகத்துவத்தைப்பற்றி எடுத்துக் கூறப்பட்டது.

பின்னர், ஆசிரியர்களாலும், மாணவமாணவிகளாலும் பொன்முடிப்புக்களும், பலதிறப்பட்ட அன்பளிப்புகளும் நன்றியறிதலாக வழங்கப்பட்டன. சிரேஷ்டவகுப்பு மாணவிகளால் ஒரு தங்கமோதிரம் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. தேநீர் உபசாரணையின் பின் வண. சுவாமிஅவர்கள் அன்னாரின் பாடசாலைச் சேவையினதும், பங்குச்சேவையினதும் பிரமாணிக்கம்பற்றிப் பேசி, அந்தியகாலம் சருவேசுரனோடு மிகவும்நெருங்கியதாய் இருக்க வேண்டுமென்றுகூறி, ஆசீரோடுமுடித்துக்கொண்டார். அதன்மேல் தலைமை ஆசிரியர் உரையாற்றினர். ஈற்றில் பிரிவுபசாரகரின் நன்றியுரையுடன் கொண்டாட்டம் இனிதே முடிவாயது.

## அர்ச். வின்சென்ற் டி போல் திருநாள்

தாண்டவன்வெளிப் பங்கில் வெகு காலமாக ஒழுங்காக நடந்துவரும் அர்ச். வின்சென்ற் டி போல் தர்மசபையைச்சேர்ந்தவர்கள்பாதுகாவலரின் திருநாளைச் சிறப்பிக்குமுகமாகக் கடந்த வாரம் 19-7-62 வியாழக்கிழமை காலை அர்ச். வின்சென்ற் டி போலுக்கு தோத்திரப்பூசை வைப்பித்துச் சபையினரும் உதவிபெறும் குடும்பத்தினரும் திவ்விய பூசைகண்டு, திவ்வியநற்கருணையும் உட்கொண்டனர். பூசை முடிவில் உதவிபெறும் குடும்பத்தினருக்குக் காலைப்போசனம் கொடுக்கப்பட்டது. அன்றுதினமே பரி. காணிக்கைமாதா பத்திச்சபையினரால் ஒரு மூடை அரிசிசேகரித்து இச்சபையினருக்கு இலவசமாய்க் கொடுக்கப்பட்டது. கட்டளைக்குருவராலும், தலைவராலும் சபையினருக்குக் கடந்த வருட சேவைக்கு நன்றியும் பாராட்டும் தெரிவிக்கப்பட்டது. இச்சபைக்கு ஞானத்தலைவர் வண. ஜோர்ஜ் ஈ. எல். வம்பேக் சுவாமி, தலைவர் சகோதரர் எம். கமிலஸ், உபதலைவர் சகோதரர் எஸ். தவராசா, காரியதரிசி சகோதரர் அ. யோசப், தனாதிகாரர் சகோதரர் ஆ. ஜெயபத்மநாதன் என்பது குறிப்பிடத்தக்கதாகும். ஈற்றில் இவ்வைபவம் முடிவுச்செபத்துடனும், ஞானத் தலைவர் ஆசிருடனும் முடிவுற்றது.

—பங்கு நிருபர்.

### முருங்கன் வட்டார

## விளையாட்டுப் போட்டி

சனிக்கிழமை 21-7-62 காலையும், மாலையும், 18 பாடசாலைகட்கிடையில் முருங்கன் விளையாட்டு மைதானத்தில், வட்டார வித்தியாதரிசி எஸ். சபாபதி அவர்கள் தலைமையில் நடைபெற்று, இறுதியில் முருங்கன் றோ. க. பாடசாலை, ஆண், பெண், இருபிரிவுகளிலும் கூடுதலானபுள்ளிகள் பெற்று முதலாம் இடங்களைப் பெற்றுக்கொண்டது. பலபிரிவுகளுக்கும் குறிக்கப்பட்ட போட்டிக் கிண்ணங்கள், பதினொன்றையும், முருங்கன் றோ. க. பாடசாலை சுவீகரித்துக் கொண்டது குறிப்பிடத்தக்கது. வெற்றிபெற்றவர்களுக்கு, வட்டார வித்தியாதரிசி, அவர்களால் பத்திரங்கள் வழங்கப்பட்டன.

### மாங்காட்டு

## யூதாததேயு

பாடும் மீன்களும், பாலும்தயிரும் பாய்ந்தோடிப்பரவசமூட்டும் மண்தான் மட்டக்களப்பு. தீஞ்சுவைகாட்டித் தேந்தமிழ்பாடும் செந்தமிழ்நாட்டின் தலைநகரமது. நீர்வளம் நிறைந்து, நிலவளம்பூண்டு, நிறையமுதுகொண்ட பலகிராமங்களைச் சுற்றியுள்ளது. மட்டக்களப்பிலிருந்து கீழ்த்திசை நோக்கிக் காத்தான்குடி, ஆரையம்பதி, தாளங்குடா, புதுக்குடியிருப்பு, கிரான்குளம், குருக்கள்மடமாகிய ஆறுகிராமங்களையும் தாண்டிச் சென்றால், மகிமைவாய்ந்த மாஞ்சோலை சொரிந்த சரித்திரம்பேசும் "மாங்காடு" மணற்பூமியையடையலாம்.

உதயம்தொட்டு அந்திவரை உடலிளைத்து உரம்பெற்று ஊதியம் தேடும்பாட்டாளிகள்தான் அங்குண்டு. படித்தவர்சிலர், பண்புடையோர் பலர் அங்குண்டு:

இக்கிராமத்தின் மத்தியிலே காட்டு முந்திரிகைத் தோப்பிலே வெண்மணல் மீது வீற்றிருக்கிறார் கர்த்தரின்உறவினர், கைவிடப்பட்டவர்களின் கருணை மூர்த்தி புனிதர் "யூதாததேயு." சுட்ட கல்லைச் சுற்றிலும்சாற்றித் தகரத்தை மேலேந்தியமண்டபத்தைக்கோவிலாக்கித் தன்னிருப்பிடமாக்கிக்கொண்டு, கண்ணீர்சிந்திக் கையேந்திக்கவலையுடன்வரும் கைவிடப்பட்டவர்களுக்காகக் காத்திருக்கிறார் அங்கே.

வாரத்தில் வெள்ளிக்கிழமைதோறும் வந்து திரளான திக்கற்றவர்கள் திருப்தியுடன் திரும்புவார்கள். மாங்காட்டு நன்மக்கள் துயர்தீர்த்து, மங்காத "மறை"யதனைப்பரப்பி மாட்சிமையோடு ஆட்சிபுரிகிறார். நான் "மறை"யினரும்கண்டு கையேந்திக் கருணை கேட்டுக் களிப்புடன் போவார்கள். மாங்காட்டு "யூதாததேயு"வின்மகிமை கண்டும், கேட்டும் மக்கள்தினமும் திரண்டு சமுத்திரமாகிறார்கள். பக்தர்களின் பரதவிப்பைப்பார்க்க முடியாமல் பாரபட்சமின்றிப் பகிர்கிறார் "கருணை"யமுதாலும், 'அன்பு'த்தேனாலும் கலந்தெடுத்த தேவனின் தேவாமிர்தத்தை.

"கண்ணீரும் கம்பலையுமாகவரும் கைவிடப்பட்டவர்களின் கருணைவள்ளலாய், அடியார்களின் அடைக்கலமாய், அண்டிவந்தவர்களுக்காதரவாய், 'அன்பு' சொரியும் அர்ச். யூதாததேயுவே எங்களுக்காகப் பிரார்த்தித்துக் கொள்ளும்"

F. C. வேதநாயகம்

## பிழை திருத்தம்

சென்ற வாரக் காவலனில் முதலாம் பக்கத்தில் இளவாலை அர்ச். என்றியரசர் கல்லூரிப் பரிசளிப்பு விழாபற்றிய செய்தியறிக்கையில் கன்னியர் மடமாணவர்களால் நாடகம் நடிக்கப்பட்டதாகத் தவருக வெளியிடப்பட்டுவிட்டது.

கன்னியர்மட மாணவிகளின் நடனத்தின் பின்னர், கல்லூரி மாணவர்களால் "Falsely Accused" என்ற நாடகம் நடத்தப்பட்டது எனத் திருத்திக்கொள்ளவும். இத்தவறுக்காக மிகவும் வருந்துகிறோம்.

## கோட்டுவிற்பனவு விளம்பரம்

**இல. M. B. 4059**

யாழ்ப்பாணம்
நம். 4, பெருமாள்கோவிலடி
வடக்குஒழுங்கை
1. கதிரவேலு சின்னத்துரையும்
2. பெண் பாக்கியலெட்சுமியும்
— வழக்காளிகள்.
எதிராக
யாழ்ப்பாணம், பலாலிறேட்
2-ம் ஒழுங்கை
சூசை சிங்கராசா — எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 4059-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணி 1962-ம்ஆண்டு ஆவணிமாதம் 18-ந்திகதி சனிக்கிழமை பிற்பகல் 4மணிதொடக்கம் அந்தக் காணிக்குள்நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 1,546-ம், 7-6-61தொடக்கம் 30-11-61 வரைக்கும் ரூபா 1,000-க்கு 24வீதவட்டியும், அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5வீதவட்டியும், கோட்டுச்செலவு 189ரூபா 57சதமும்.

### ஆதன விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணை கோயிற்பற்று, வண்ணார்பண்ணை தென்கிழக்கு இறை "மாணிக்கன்காடு" பர. நில. இலா. $2\frac{1}{2}$-யும், கிணறும், பயிர்வகைகளும், அதைச்சேர்ந்தவைகளும். எல்லை: கிழக்கு — கைஒழுங்கை. வடக்கு — முருகர் சின்னட்டியின் ஆதனம். மேற்கு — பெரியான் பாலுவின் ஆதனம். தெற்கு — ஒழுங்கை. மேற்கெல்லைக் காணியில்இருக்கும் கிணற்றில்பங்கும், வழிவாய்க்கால் பாவிப்புரித்தும் பிறநீங்கலாக. இதடங்கலும்.

**அ. ஜெகநாதன்,**
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்.
16 A, அம்மன்றேட்,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

## கோட்டுவிற்பனவு விளம்பரம்

**இல. T. 1066**

மண்டைதீவு
மரணசாதனமின்றிக்காலஞ்சென்றுபோன
பொன்னம்பலம் குமாரவேற்பிள்ளை
மண்டைதீவு தெற்கு
திருநீலகண்டர் பஞ்சாட்சரம்
(தத்துவகாரன்)

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் T. 1066-ம்இலக்க தத்துவவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும் மூன்றுதுண்டுக் காணிகளை 1962-ம்ஆண்டு ஆவணிமீ 25-ந் திகதி சனிக்கிழமை காலை 10மணிதொடக்கம் அந்தந்தக்காணிக்குள்நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### ஆதனங்களின் விபரம்

1. வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் தீவுப்பகுதி அல்லைப்பிட்டி கோயிற்பற்று, மண்டைதீவுஇறை "சொக்கன்கறை" பர. நில. இலா. $8\frac{7}{8}$. எல்லை: கிழக்கு — பி. குமாரவேலுவின் ஆதனம். வடக்கு — நாராயணபிள்ளை வெற்றிவேலுவுக்கும், பங்காளருக்கும் உரியஆதனம் மேற்கு — சிறுப்புலம் கந்தசாமி கோயிலுக்குரிய ஆதனம். தெற்கு — மதுரைநாயகம் கைம்பெண் கமலம்மாவுக்குரிய ஆதனம். இதில் சொரியலாய் அரைவாசி.

2. மேற்படிஇறை "கற்கடவை" பர. நில. இலா. 30. எல்லை: கிழக்கு — கடற்கரை. வடக்கு — என். தாமோதரம்பிள்ளைக்கும், பங்காளருக்கும் உரியஆதனம். மேற்கு — சிவஞானசுந்தரத்திற்கும், மறுபேருக்கும் உரியஆதனம். தெற்கு — கோவிலுக்குரிய ஆதனம்.

3. மேற்படிஇறை "செம்மணித்தியம்புலம்" பர. நில. இலா. 14. எல்லை: கிழக்கு — வி. திருநாவுக்கரசுவுக்கும், இன்னொருவருக்கும் உரியஆதனம். வடக்கு — எஸ். தியாகராசாவுக்கும், மறுபேருக்கும் உரியஆதனம். தெற்கு — தேவாலயத்துக்குரிய (சேர்ச்) ஆதனம். இது அடங்கலும்.

**அ. ஜெகநாதன்,**
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்
16 A, அம்மன் றேட்,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்நாட்டுச் செய்திகள்

## ஆசிரியரும் தேநீர்ச்சாலைகளும்

அரசாங்க பாடசாலைகளின் ஆசிரியர்கள் பாடசாலையில் தேநீர், சிற்றுண்டிச் சாலைகள் நடத்த இனிமேல் அனுமதிக்கப்படமாட்டார்கள். தற்போது அவைகளை நடத்துவதில் ஈடுபட்டிருக்கும் ஆசிரியர்கள் அவைகளைக் கைவிடும்படி இரண்டுவார முன்னறிவித்தல் கொடுபடவிருக்கிறது. தற்போது அவர்கள் நடத்திவரும் தேநீர், சிற்றுண்டிச்சாலைகளை மூடப்படாதென்றும் அவைகளைப் பாடசாலைக் கூட்டுறவுச்சங்கத்திடம் கையளிக்க வேண்டுமென்றும் கேட்கப்பட்டிருக்கிறார்கள்.

## இளம்பிள்ளைவாதநோய்

இந்நோய் அச்சுவேலியில் முதன் முதலாக இருபிள்ளைகளுக்குக் கண்டிருப்பதாகத் தெரியவருகிறது. யாழ்ப்பாண அரசினர் ஆஸ்பத்திரியிலே நோய் கண்ட ஒருபிள்ளை சென்றசனிக்கிழமை இறந்துவிட்டது. இதுவரை இந்நோயால் இறந்தபிள்ளைகள் இருபதுவரையிலாகும். இந்நோய் 270பிள்ளைகளுக்குக் கண்டிருந்தது. இவர்களுக்குரிய பிரத்தியேகவாட்டில் தற்போது 90 பிள்ளைகள் சிகிச்சைபெற்று வருகிறார்கள்.

## ஆசிரியர்கள் போதாக்குறை

நாட்டிலுள்ள பாடசாலைகளிலே பதினோராயிரம் ஆசிரியர்கள் குறைவாயிருக்கின்றனர். ஆனால், திறைசேரியோ இரண்டாயிரம்புதிய ஆசிரியர்களை நியமனஞ்செய்யவே கல்விப்பகுதிக்கு அனுமதி வழங்கியிருக்கிறது. அதனால் பாடசாலைகளின் ஆசிரியர்கள்தொகையை இருபதுசதவிகிதம் குறைப்பதன்றிக் கல்விப்பகுதிக்கு வேறுவழியில்லையென்றுகண்டு அவ்வாறே செய்யப்படவிருக்கிறது. சமீபகாலத்திலே கல்விமந்திரி மேல்மாகாணத்திலிருந்து சுமார் ஆயிரம் ஆசிரியர்களை ஆசிரியர் குறைவான பகுதிகளுக்கு மாற்றவிருக்கின்றார்.

## சேவைகளில் மாற்றமில்லை

தலைமன்னாருக்கும், தனுஸ்கோடிக்குமிடையிலே இந்திய-இலங்கைப் படகுச்சேவையைக் குறையாது முன்போல நடத்துவதென்று இந்தியறெயில்வேப்பகுதி முடிவுசெய்திருப்பதாலே கொழும்புக் கோட்டையிலிருந்து தலைமன்னார்செல்லும் றெயின்வண்டிகளின் சேவை ஞாயிறு தவிர ஏனையநாட்களில் வழமைபோல நடைபெறும். அவ்வாறே வாரந்தோறும் ஆறுமுறை நடைபெறும் தற்போதைய தபாற் சேவையும் மாற்றமில்லாது முன்போலத் தொடர்ந்து நடைபெறும்.

## ஜி. சி. ஈ. பரீட்சை

பொதுத் தாராதரப்பத்திர சாதாரணதரப்பரீட்சை(ஜி.சி.ஈ.)வருகிறஆவணி மாதம் 7-ந்திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகவிருக்கிறது. இம்முறை 93,000பரீட்சார்த்திகள் இப்பரீட்சைக்குத் தோற்றவிருக்கின்றார்கள். சென்றவருடம் ஆவணிமாதம் நடைபெற்ற இப்பரீட்சைக்கு 54,000பேர் தோற்றியிருந்தார்கள்.

## தையல் பொருட்காட்சி

தீவுப்பற்றுக் காரியாதிகாரி பிரிவுக் கிராமாபிவிருத்திச் சங்கங்களின் தையல்வேலைப் பொருட்காட்சியும், போட்டிகளும், விற்பனவும் 28-7-92 சனிக்கிழமை பிற்பகல் 2மணியளவில் ஊர்காவற்றுறை அர்ச். அந்தோனியார் கல்லூரி மண்டபத்தில் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் வி. பி. வித்தாச்சி, அவர்கள் ஆதரவில் நடைபெறும்.

## திருப்தி தருவனவாயில்லை

சமீபத்திலேநடைபெற்ற மூன்று உபதேர்தல்களினதும் முடிவுகள் அரசாங்கத்துக்கு முற்றிலும மகிழ்ச்சி தருவனவாய் இல்லையென்று அரசாங்க கட்சி அங்கத்தவருக்குப் பிரதமர் தெரிவித்துள்ளார். அவர்கள்சகலருக்கும் அனுப்பியுள்ள ஒருசுற்றுக்கடிதத்திலே, பொதுவாக மூன்று தேர்தல்களின் முடிவுகளும், குறிப்பாக வெலிமடைத் தேர்தல்முடிவும் திருப்தியளிப்பனவாய் இல்லையெனக் குறிப்பிட்டிருக்கின்றார்.

## வடக்குநோக்கிச் செல்வோம்

உடுப்பிட்டி மகளிர்கல்லூரியில் நடைபெற்ற கருத்தரங்கம்ஒன்றில் மத்தியவங்கியைச்சேர்ந்த திரு. பி விக்னராசா அவர்கள்பேசியபோது: "இலங்கையின் தென்பகுதியை நோக்கிச் செல்வதிலும்பார்க்க நாம் வடக்கே கடலைநோக்கிச் செல்லவேண்டும்; சராசரியாகத் தமிழ்ப்பிரசையொருவரைக் கவனித்துப் பார்க்கும்எவருமே இன்று பொருளாதாரநிலையில் தமிழர் எங்குள்ளனர்என்பதை அறிவதற்குப் பொருளாதார நிபுணர்ஒருவரை நாடவேண்டிய அவசியமில்லை; கடந்தகால பொருளாதார சுபீட்சத்தின் சிகரத்திலிருந்து நமதுசமூகம் இப்போது வீழ்ச்சியடைந்துள்ளது; இந்தநிலைமையிலே கடல்வளத்தைப் பயன்படுத்துவது சாலச்சிறந்ததாகும்; பருத்தித்துறைக்குவடக்கே பரந்துள்ள கடலானது ஆழ்கடல் மீன்பிடித்தலுக்கு அதிகம் சிறந்ததென்று மீன்பிடிநிபுணர்கள் ஒரேமுகமாகக் கூறியுள்ளார்கள்" எனக் கூறலாயினர்.

## அதிர்ச்சிக்குரிய செய்தி

இலங்கையின் மிகப்பெரிய வழக்கென்று சொல்லப்படும் புரட்சிச்சதி வழக்கு சென்ற 18-ந்திகதியன்று முதன்முதலாக விசாரணைக்குவந்தபோது, இவ்வழக்கில் ஆறுவதுஎதிரியாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளவரும், இன்னும் கண்டுபிடிக்கப் படாதவருமான முன்னைநாள் கடற்படைத் தளபதி திரு. றேயிஸ் டி மெல்லை இம்மாதம் 30-ந்திகதியன்று நீதிஸ்தலத்தில் தாம் ஆஜர்செய்வதாக எதிரிகளின் சிரேஷ்டவழக்கறிஞர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் தெரிவித்ததும் எங்குமே பெரும் அதிர்ச்சியும், பரபரப்பும் ஏற்பட்டன. கைதுசெய்யப் பட்டவர்களுள் திரு. றேயிஸ் டி மெல்லும் ஒருவரென்று ஆரம்பத்தில் வெளியான அரசாங்கஅறிக்கை கூறியது. பின்னர் அவர் கைதுசெய்யப்படவில்லை; அவரைக்கண்டுபிடிக்க முடியவில்லையென்று அரசாங்கஅறிக்கைகள் தெரிவித்தன. கடைசியாக அவரைப் பிடிப்பதற்கான தகவல்களைக் கொடுப்பாருக்கு ஆயிரம் ரூபா வெகுமதிவழங்குவதாகப் பொலிசரும் பிரசித்தஞ்செய்தார்கள்.

## சுயபாஷைகளில் தந்திகள்

இலங்கைமுழுவதிலுமுள்ள 223 தபாற்கந்தோர்கள், உபதபாற்கந்தோர்களிலே தமிழிலும், 834தபாற்கந்தோர்கள், உபதபாற்கந்தோர்களிலே சிங்களத்திலும் தந்திகள்அனுப்புதற்கானவசதிகள் தற்போது செய்யப்பட்டுள்ளன. இவற்றிலெல்லாம் ஆங்கிலத்திலும் தந்திகள்அனுப்பலாம்.

## தமிழ்ச்சர்வகலாசாலை

திருகோணமலையிலே தமிழ்ச்சர்வகலாசாலை இயக்கத்தினரால் வருகிற தைமாதம் ஆரம்பிக்கப்படவிருக்கும் விவசாயக்கல்லூரியிலே பயிற்சியளிக்கத்தகுந்த ஒருவரை இந்தியாவிலிருந்து தருவிப்பதற்கும்; அங்கே ஒரு மீன்பிடிபயிற்சிநிலையத்தை ஆரம்பிப்பதற்குமான [illegible] பட்டுவருவ[illegible]

# உலகில் உருளும் உருள் [note: heading as printed: உருளும் உலகில்]

## ● டோமினிக்கா

காலஞ்சென்ற சர்வாதிகாரி ருஜில்லோவின்காலத்தில் ஒருவருடத்துக்கு முன்னர் றெயிலி மேற்றிராணியாண்டகைக்கு அரசாங்கம்இழைத்த அநீதிக்குப்பரிகாரமாகப் பிராயச்சித்தபிரார்த்தனையொன்று டோமினிக்கதேசக் கிறிஸ்தவர்களால் நடாத்தப்பட்டது.

பதினாயிரக்கணக்கானமக்கள் சலந்துகொண்ட இந்தப்பிரார்த்தனை அணிவகுப்பு மேற்றிராணியாண்டவரின் மாளிகைக்குமுன்னால் ஆரம்பமாயது. ஒருவருடத்துக்குமுன்னர் சர்வாதிகாரியின் துருப்புகள் இம்மாளிகையில் பிரவேசித்து வெறியாட்டம் நடாத்தியதுடன், மேற்றிராணியாரும் பலமாக அவமானப்படுத்தப்பட்டார். மேற்றிராணியாரும், அங்குள்ள குருக்களும் வேறிடத்துக்கு இரகசியமாகக்கொண்டு செல்லப்பட்டதால் உயிர்பிழைக்க முடிந்தது.

## ● லிதுவேனியா

சோவியற்யூனியனில் அங்கம்வகிக்கும் லிதுவேனியநாட்டில் மதானுசாரத்தை நிறுத்திவிடப் பொதுவுடைமைவாதிகள் எடுக்கும்முயற்சிகள் மிக அதிகமாக்கப்பட்டுள்ளனஎனச் செய்திகள் தெரிவிக்கின்றன. அங்கு மீண்டும் கத்தோலிக்க மதவழிபாடு தலைதூக்குவதை அழித்துவிட நாஸ்திகக்குழுவினர் அரும்பாடு படுகின்றனர். நாஸ்திகப் பிரசாரத்தை அதிகமாக்கப் 17,000 தொண்டர்கள் செயல்படுத்தப் படுகின்றனர்.

## ● நியூசிலாந்து

முன்னர் ஆகாயவிமானமோட்டும் தொழிலில் ஈடுபட்டிருந்த விமானியொருவர் அண்மையில் றோமைநகரில் குருத்துவ அபிஷேகம் பெற்றுள்ளார். றோமாபுரியிலுள்ளபீடாகல்லூரி வயது வந்தவர்கட்காகக் குருத்துவப்பயிற்சியளித்துவருகிறது. இங்கு பயிற்சிபெற்ற முதலாவது நியூசிலாந்துவாசி இக்குருவரே. அன்றுதினம் 35வயதுக்கும்,61வயதுக்குமிடைப்பட்ட 24பேர் குருப்பட்டாபிஷேகம் பெற்றனர்.

## ● கோரியா

தென்கோரியாவில் மற்றொரு குருமார் பயிற்சிக்கழகம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இதுவரை தலைநகர் சேயோலில்உள்ள பிரதான குருமார்பயிற்சிக்கழகமே தென்கோரிய திருச்சபைக்கான குருமார்களைப்பயிற்றி வந்துளது. யேசுசபைக்குருமார் இக்கழகத்துக்குப் பொறுப்பாயிருப்பார்கள்.

## ● வத்திக்கான்

அடுத்துவரும் திருச்சபையின் பொதுச்சங்கத்தின்போது வாக்குகளை எண்ணுவதற்காக எலக்ரோனிக் முறையொன்று பொருத்தப்படும். இரண்டாயிரத்துக்குமதிகமான பிரதிநிதிகள் பொதுச்சங்கத்தில் கலந்துகொள்வர். தீர்மானங்கள் வாக்கெடுப்புக்கு விடப்பட்டபின் அவற்றை உடனுக்குடன் எணணிக் கணக்கெடுக்க எலக்ரோனிக் கருவிகள் உதவும். அண்மையில் இக்கருவிகள் பரீட்சார்த்தமாக இயக்கப்பட்டவிடத்து திருப்திகரமாகச் செயலாற்றினஎன அறிவிக்கப்படுகிறது.

## ● பிறேஜாவிலி

புதிதாகச் சுதந்திரமடைந்த பத்து ஆபிரிக்க நாடுகளிலிருந்துவரும் கத்தோலிக்க கல்விமான்களின் மகாசபையொன்று ஆபிரிக்ககத்தோலிக்க பாடசாலைகட்கான கல்வித்திட்டத்தை வரையவிருக்கின்றன. இந்த மகாசபைக்கு எல்லாஆபிரிக்க மேற்றிராணிமார்களும் தங்கள் ஆசியையும், அனுமதியையும் அளித்துள்ளனர்.

## ● குவான்ரானமோ

இங்குள்ள அமெரிக்க கடற்படைத்தளத்தில் வேலைபார்க்கும் கியூபாவைச் சேர்ந்தோரில்பலர் தினசரி அதிகாலைப் பூசைக்குச் சமுகமளிக்கும் பழக்கமுள்ளவர்களாம். இத்தளத்தில் 3,200 கியூபாமக்கள் வேலைபார்க்கிறார்கள். அவர்களில் சராசரியாகத் தினசரி 400 பேர் காலைப்பூசைக்குச் சமுகமளிக்கிறார்கள்.

## ● ஸ்பெயின்

ஸ்பெயின்தேசத்தில் சலமன்காஎனுமிடத்திலுள்ள 370 வயதுடைய கல்லூரியொன்றை அயர்லாந்திடமிருந்து ஸ்பானியா பெற்றுக்கொண்டது. பதினாறுவது நூற்றாண்டில் பிறதேசங்களிலிருந்து குருக்கள்வருவது தடுக்கப்பட்டமையால் குருக்களைப் பயிற்றுவதற்காக ஐரிஸ்குருமாரால் இப்பயிற்சிக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது. இதன் நிர்வாகம், தாபரிப்புமுழுவதும் அயர்லாந்தின் பொறுப்பிலேயே விடப்பட்டது. அண்மையில் 17,500பவுண்களை ஸ்பானியஅரசாங்கம் அயர்லாந்து மேற்றிராணிமார்கட்கு நஷ்டஈடாகவழங்கி இக்கல்லூரியைப் பொறுப்பேற்றுக் கொண்டது.

தொகுப்பு: மடோனா

## கோட்டு விற்பனவு விளம்பரம்

புத்தூர் தெற்கு
தவசி சின்னவன் — வழக்காளி.
எதிராக, புத்தூர் கிழக்கு
சோமு செல்லப்பா
தற்போது கொலனி, நம். 503, கல்மடு, கிளிநொச்சி) — எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 2300-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் மூன்றுதுண்டுக் காணிகள் 1962-ம்ஆண்டு ஆவணிமாதம் 18-ந்திகதி சனிக்கிழமை முற்பகல் 9, 9½, 10மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள்நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் ரூபா 1,382-50. இதில் ரூபா 750-க்கு 26-6-1958 திகதிதொடக்கம் 21-1-1959திகதிவரைக்கும் 9வீதவட்டியும், பின்திகதிதொடக்கம் இறுபடும்வரைக்கும் 5வீதவட்டியும், கோட்டுச்செலவு 181ரூபா 57சதமும்.

### காணி விபரம்

1. புத்தூர் கோயிற்பற்று, புத்தூர் தெற்கிறை கள்ளியவத்தை நிலப்பரப்பு 2, [illegible]க்கமாய். எல்லை: [illegible] கனகசபை முத்துக்குமாருவுக்குரிய ஆதனம். வடக்கு — பண்டாரி கைம்பெண் நாகிக்கும், பங்காளருக்கும் உரிய ஆதனங்கள். மேற்கு — ஒழுங்கை. தெற்கு — வல்லி கைம்பெண் தெய்விக்கும், பங்காளருக்குமுரிய ஆதனங்கள். இதடங்கலில் சொரியலாய் அரைவாசி விற்கப்படும்.

2. புத்தூர்இறை கள்ளிவத்தை நிலப்பரப்பு 48¼. எல்லை: கிழக்கு — ஒழுங்கை. வடக்கு — மளவராயர் கந்தையாவின் உருத்தாளிகளின் ஆதனங்கள். மேற்கு — ஏ. கே. முத்துக்குமாருவுக்குரிய ஆதனம். தெற்கு — பண்டாரி கைம்பெண் இளையாச்சிக்குரிய ஆதனம். இதடங்கலில் சொரியலாய் இருபத்தேழில் நாலுபங்கு விற்கப்படும்.

3. புத்தூர்இறை கள்ளியவத்தை நிலப்பரப்பு 1. எல்லை: கிழக்கு — ஒழுங்கை. வடக்கு — பரமன் கைம்பெண் இலட்சுமிக்குரிய ஆதனம். மேற்கு — தில்லைநாதர் மாணிக்கவாசகத்துக்குரிய ஆதனம். தெற்கு — சித்துங்கமாப்பாணர் தாமோதரம்பிள்ளைக்குரிய ஆதனம். இதடங்கலும் விற்கப்படும்.

ந. ஆறுமுகம்,
கொம்மிஷனரும், விலைமதிப்பாளரும்.
சித்தங்கேணி, 16-7-1962.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினசரி பூசை வழிகாட்டி

### ஆடி மாதம்

| | | | |
|---|---|---|---|
| 29 | ஞா. | இஸ்பிரீத்துசாந்து ஆக. பின் 7-ம் ஞாயிறு (வி. ம.) | ப |
| 30 | தி. | ம. (காலதினம்) | ப |
| 31 | செ. | அர்ச். இஞ்ஞாசியார் | வெ |

### ஆவணி மாதம்

| | | | |
|---|---|---|---|
| 1 | பு. | ம. (காலதினம்) | ப |
| 2 | வி. | அர்ச். அல்போன்ஸ் லிகோறியார் (அர்ச். முடியப்பர்) | வெ |
| 3 | வெ. | ம. (காலதினம்) யே. | ப |
| 4 | ச. | அர்ச். திமிங்கு ம. | வெ |

# சத்தியவேத பாதுகாவலன்

**1962-ம் ஆண்டு ஆடிமாதம் 29-ந் தேதி**

# கடமை, கட்டுப்பாடு, கண்ணியம்

திருச்சபையை வழிநடாத்துபவர் திவ்விய இஸ்பிரீத்து. காலத்துக்குக்காலம் புதிய அம்சங்களைப் புகுத்தி சபையின் வளர்ச்சியில் மறுமலர்ச்சி ஏற்படுத்துவது அவர் வழி. இல்லற அப்போஸ்தலத்துவம் இருபதாம் நூற்ருண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட மறுமலர்ச்சி இயக்கம் ஆகும்.

இது சனநாயக யுகம். மக்களாட்சி மலரும் காலம். சத்திய மறையிலும் ஆளும் திருச்சபையின் அதிகாரங்கள் பணிகள் ஓரளவு மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. அப்பணிகளில் ஒருபகுதியை இல்லறத்தோர் ஏற்று நடாத்த வழிவகைகள் வகுக்கப்பட்டுள்ளன. இதுவே இல்லற அப்போஸ்தலத்துவம் எனப்படுகிறது. இந்த அப்போஸ்தலத்துவத்தின் இணையற்ற இயக்கமே மரியாயின் சைனியம் என்றழைக்கப்படுகிறது.

கத்தோலிக்கன் ஒவ்வொருவனும் தன்னைத் தூய்மை செய்து கொள்ளல் அவசியம். பின்னர் தனது அயலவனையும் அவ்வழிக்குக் கொண்டுவருதல் வேண்டும். உன்னைப்போல் உன் அயலவனையும் நேசி என்கிருர் எமது இரட்சகர். இக்கூற்று உலக அலுவல்கட்கு மட்டும் உரியதல்ல. அயலவனின் ஆன்ம கருமங்களிலும் நாம் உதவுதல் வேண்டும். இவ்விரு கடமைகளையும் அன்னையின் படையணி தனது அங்கத்தவர்கட்கு அடிக்கடி நினைவுறுத்துகிறது.

இவ்வுலகில் வசிக்கும் ஒவ்வொரு மனிதனும் இறைவனுல் சுதந்திரம் அளிக்கப்பட்டுள்ளான். அச்சுதந்திரம் மற்றையோரின் சுதந்திரங்கட்கு இடையூருயிருத்தல் தகாது. தீய செயல்கட்கும் அது வழியாக விளங்கக்கூடாது. எனவே மனிதனின் செயல்களில் ஓரளவு கட்டுப்பாடு அவசியம். சேனை இக்கட்டுப்பாட்டை அங்கத்தினருக்குப் போதிக்கிறது. சேனையாளன் தவறிவிடக்கூடிய வழிகளெவை என்பதைச் சேனை நன்குஅறியும். அச்சமயங்களில் அனுசரிக்கப்பட வேண்டிய கட்டுப்பாட்டு விதிகளையும் அது வகுத்திருக்கிறது.

தனது கடமையைக் கட்டுப்பாட்டுடன் செய்துகொண்டே செல்பவன் கண்ணியமிக்கவனுகிருன். பண்பு மிக்கவன் என அவன் மதிக்கப்படுகிருன். உண்மையான செல்வாக்கு அவனைச் சேர்கிறது. மகத்தான காரியங்களில் தலையிட அவனுக்கு அது உதவுகிறது. அக்கண்ணியம் பணத்தினுல் பெறப்பட்டதல்ல. பலத்தினுல் பலவந்தமாகப் பறிக்கப்பட்டதுமல்ல. இறைவனுக்கும் நாட்டுக்கும் உரிய பிரசையாக, உதவும்மனிதனுக வாழ்வது உயர்ந்தகண்ணியமல்லவா?

கடமை, கட்டுப்பாடு, கண்ணியம் என்ற நிலைகளை தனது அங்கத்தவர்கள் பெற வழிவகுக்கும் மரியாயின் சைனியத்தை ஒரு கருதினுல் இருபதாம் நூற்ருண்டின் அதிசயம் என வர்ணிக்கிருர். லூர்துபதியில், பத்திமாவில் தேவ அன்னை அறிக்கையிட்டவைகளை நிறைவேற்றும் பொறுப்பைக் கையேற்றுச் செயலாற்றி வருவதில் இப்படையணியின் நடவடிக்கைகள் இணையற்றவை.

இலங்கையில் இருபத்தைந்தாவது ஆண்டுவிழாவைக் காணும் மரியாயின் சைனியத்தினரை மகிழ்ச்சியுடன் நோக்குவோம். அவர்களின் சாதனைகளை எண்ணி அகமகிழ்வோம். எடல் குயின் போன்ற புனிதர்களை எங்கள் மத்தியிலும் இப்படையணி பிறப்பிக்கவேண்டுமெனப் பிரார்த்திப்போம். சேனையின் எதிர்காலம் சிறப்பாக விளங்கட்டும் என நல்லாசி கூறுவோம்.

### செப அப்போஸ்தலசபை வெளியீடு

**ஆடி மாதம்**

பொதுக்கருத்து: திருச்சபையின் பொதுச்சங்கத்தில் கலந்து கொள்பவர்கள் எல்லோருக்கும் சர்வேசுரன் மிகுந்த ஞானஒளியை அளிக்கும்படியாக வேண்டிக்கொள்வது.

வேதபோதக கருத்து: மிஷன்நாடுகளில் வேதசம்பந்தமான கலைகளும், இலக்கியங்களும் தகுதியுள்ளவைகளாய்ப் பலன் தரும் முறையில் முன்னேற்றம் அடையும்படியாக மன்ருடிக் கொள்வது.

### காலைக்காணிக்கைச் செபம்

யேசுவின் திருஇருதயமே, நாங்கள் கட்டிக்கொள்ளும் துரோகங்களுக்குப் பரிகாரமாகவும், தேவரீர்திருப்பீடத்தில் ஓயாமல் உம்மைத்தானே பலியாகஒப்புக்கொடுக்கும் சகல கருத்துகளுக்காகவும் அடியேன் இன்றுசெய்யும் செபங்களையும், கிரியைகளையும், படுந்துன்ப வருத்தங்களையும் அர்ச்சியசிட்ட கன்னிமரியாயின் மாசில்லாத இருதயத்தின்வழியாக, உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன். விசேஷமாகச் சபையாருக்குக் குறிக்கப்பட்ட சகல கருத்துகளுக்காகவும், பரிசுத்த பாப்பரசர் இம்மாதத்துக்கென நியமித்த கருத்துகளுக்காகவும் அவைகளை ஒப்புக்கொடுக்கிறேன்.

# திவ்விய இஸ்பிரீத்துசாந்துவின் திருநாளுக்குப் பின்வரும் 7-ம் ஞாயிறு

பாவத்தினுல் வரும் சம்பாவனை மரணம்: கெட்டமரம் கெட்டகனிகளைக் கொடுக்கும் என்பதே இன்றைய ஞாயிற்றுக்கிழமைச் சாரமாகும். நாங்கள் மோட்சராட்சியத்தைத் தேடுவதற்கு எதிராகவரும் தின்மைகளிலிருந்து எங்களை இரட்சிக்கும்படியாக நம்பிக்கையூட்டும் இந்த ஞாயிற்றுக்கிழமைகளில் கேட்போமாக. இன்றைய வழிபாடு நாங்கள் பாவத்தினுல் எங்களுக்குத் தின்மையை வருவித்தாலும் சருவேசுரனுடைய வரப்பிரசாதத்தினுல் நன்மையை வருவிக்கிறேம் என்பதை விளக்கிக்காட்டுகின்றது. இந்த வரப்பிரசாதத்தின் மகிமையையே பிரவேசவாக்கியமும் எடுத்துரைக்கின்றது. நீங்கள் அனைவரும் கை கொட்டித் தேவனுக்குமுன் பெருமகிழ்ச்சிக்குரலோடு ஆர்ப்பரியுங்கள்.

**செபமும் போதகப்பகுதியும்:**

சபைச்செபம் நல்லவைகளையும் கெட்டவைகளையும் ஒப்பிட்டுப்பார்த்து அதன் வேறுபாடுகளைக் கூறுகின்றது. நாங்கள் தீயன அனைத்தையும் எங்களிடமிருந்து விலக்கி எங்களுக்குத் துணையாயிருப்பவையாவற்றையும் அருளிச் செய்யவேண்டுமென்று தேவனைப்பார்த்து மன்ருடுவோம். நம்பிக்கை எப்பொழுதும் வருங்காலத்தையே குறிக்கின்றது. அதாவது: எங்கள் நம்பிக்கை தேவனின் சித்தத்தில்தான் தங்கியிருக்கின்றது. திரும்பவும் நிருபம் எங்கள் சரீரப்பெலவீனத்தைத் தேவனுடைய பலத்தோடு ஒப்பிட்டுப்பார்க்கின்றது. அதாவது: பாவத்தின் அடிமைகளைப் பரிசுத்ததனத்தின் தொண்டர்களோடு ஒப்பிட்டுப்பார்க்கின்றது.

பாவத்தின் சம்பாவனை மரணமானுல், சருவேசுரனுடைய வரப்பிரசாதம் நமதாண்டவராகிய கிறிஸ்துநாதரில் நித்தியசீவியமாகும் என்று பவுல் அப்போஸ்தலர் இன்றைய நிருபத்தில் கூறுகின்றுர். படிக்கீதம் தேவபயத்தோடு அவருடைய ஒளியைப்பெற்றவர்கள் ஒருபொழுதும் கைவிடப்படமாட்டார்கள் என்று கூறுகின்றது. சுவிசேஷத்தில் கிறிஸ்துநாதர் நல்ல மரமெல்லாம் நல்லகனி கொடுக்கும் கெட்டமரமோவெனிற் கெட்டகனி கொடுக்கும் என்று கூறுகிருர். நாம் கடவுளின்சித்தத்தைச் செய்யவேண்டுமானுல் நாங்கள் பரிசுத்தமானவர்களாய் இருக்கவேண்டும். இப்பரிசுத்ததனம் மேல்பகட்டுப் பரிசுத்ததனம் அல்ல. ஆனுல், பரிசுத்ததனத்தில் நன்ருக ஊன்றி அதனுல், மேற்கொள்ளப்பட்டவர்களாகவும், உருக்கப்பட்டவர்களாகவும் இருக்கவேண்டும். நாம் செபம்செய்பவர்களாயிருக்காவிட்டால் செபம் எங்களை இரட்சிக்க முடியாது. என்னைநோக்கி ஆண்டவரே, ஆண்டவரே என்று சொல்பவர்களல்ல, ஆனுல், என் பிதாவின் சித்தப்படி நடப்பவர்களே மோட்சராட்சியத்தில் பிரவேசிப்பார்கள் என்று யேசுபெருமான் கூறுகிருர். எம்மை அரசாளும் பரிசுத்த பாப்பிறை 23-ம் அருளப்பர் கூறுவதுஎன்ன? நாம் நீண்ட செபங்களைச் செபிப்பவர்களை வேண்டவில்லை. ஆனுல், பரிசுத்தமான, மாசு அற்ற முழுக்கிறிஸ்துவ சீவியம் சீவிப்பவர்களையே வேண்டுகின்றேம் என்கிருர்.

**நற்கருணைச் சடங்கு:**

ஒப்புக்கொடுத்தல் பகுதி தானியேல் தீர்க்கதரிசியின் வாயிலாக எங்களுடைய பலி தேவனுக்கு உகப்பான பலியாக இருக்கவேண்டுமென்று கூறுகின்றது. "தேவனை நம்பினவர்கள் ஒருபொழுதும் கலக்கமடையமாட்டார்கள், ஏனெனில், அவரை நம்பினேர் கைவிடப்படமாட்டார்கள். தேவனைப் புறக்கணிப்போர் கலக்கமடைவார்கள். ஏனெனில், அவர்கள் தேவனினுல் கைவிடப்படுவார்கள்." அமைதி மன்ருட்டு கெட்டகாயினின் பலியையும், ஆபேலின் உத்தமமான பலியையும் ஒப்பிட்டுப்பார்க்கின்றது. உட்கொள்ளுதல் பகுதியில் நாம் எல்லோரும் மாமிசத்தின் மகிமையைப்பற்றி யோசிக்கலாம்: வார்த்தையானவர் மாமிசமானுர். இந்த மாமிசம்தான் மகிமைப்படுத்தப்பட்டுப் பிதாவாகிய சருவேசுரனின் வலதுபாரிசத்தில் உட்கார்ந்திருக்கின்றது.

"மனுமகனின்மாமிசமாகிய தேவநற்கருணை எங்களுக்கு அர்ச்சிப்பையும் எங்களுடைய மகிமைப்பிரதாபத்துக்கு ஒரு வாக்குறுதியாகவும் இருக்கிறது." உட்கொண்ட பின்பகுதி தேவனின் கடைசிமகிமையைப்பற்றிக் குறிக்கின்றது.

## பேசும் பேனு

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

சகமாணவியின் மரணவிசாரணையின் போது அவளுடன் தற்கொலைசெய்ய முயற்சித்துத் தோல்வியடைந்த ஒரு இளம் மாணவிக்கும், மரணவிசாரணை அதிகாரிக்கும்நடந்த சம்பாஷணை இது.

தற்கொலைச்செய்திகள் தினசரி பத்திரிகைகளில் காணப்படுகின்றன. எங்கள் கத்தோலிக்கர்கள் இதுபற்றிக் கூறுவதென்ன? அதெல்லாம் பிறமதத்தவர்களின் அறியாமையால்நடப்பது. எங்கள் பிள்ளைகள் அப்படியெல்லாம் செய்யமாட்டார்கள். ஏனெனில், நாங்கள் பிள்ளைகளைக் கடுமையாகக் கண்டிக்கிறேம்.

இப்படிக்கூறும் பெற்ரேர்கள் மேலேகூறிய தற்கொலைச்சம்பவத்தில் கலந்துகொண்ட இரு இளம்மாணவிகளும் கிறிஸ்தவர்கள்என்பதை அறிந்துகொள்ளல்வேண்டும். இரண்டாவதாக அச்சிறுமிகளின் பெற்ருேர் தங்கள் புதல்விகளின் நடத்தை சம்பந்தமாக அதிக கண்டிப்புக் காட்டியதாலேயே தற்கொலைமுயற்சி மேற்கொள்ளப்பட்டதென்பதும் மரணவிசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எது எப்படியாயினும் கத்தோலிக்க பெற்ருர்கள் கவனிக்கவேண்டியதொன்றுண்டு. காலம்மாறிவிட்டது. கைக்கு அடங்கியகாலத்தில் மட்டுமே கண்டிப்புச் சிறந்தது. தோளுக்குமிஞ்சினுல் தோழன் என்ற முதுமொழியைக் கவனித்தல்அவசியம். வயதுவந்தபிள்ளைகளை அவர்கள் மனம்வருந்தும்வண்ணம் ஏசித்திட்டுவதும், அதிகமாகக் கண்டிப்பதும் பயனற்றவை. இளவயதுள்ள நம்பியரையும், நங்கையரையும் ஆரம்பத்தில் மனம்போன விடமெல்லாம்செல்லவிட்டு, விடயம்முற்றியபின் வருந்துதலிற் பயனில்லை. அன்பான பேச்சு, கனிவோடு கண்டிப்பு, குற்றத்தின் தாற்பரியத்தைத் தோழனுக விளக்கும்முறை, புதல்வரின் நல்வாழ்வுக்காக இடைவிடாது பிரார்த்தித்தல் என்பனவே அதிக பயன்தரும்.

## மலையாள மொழியில் பூசை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆக்கப்பட்டிருக்கின்றது. குருமடங்கள் நவசந்நியாச மடங்களில் இம்மாற்றங்கள் உடனடியாகப் பின்பற்றப்படும்.

கேரளாவிலுள்ள கத்தோலிக்கரில் 1,4000,000 பேர் சீரிய ரீதியைச் சார்ந்தவர்கள். மலங்காரா ரீதியைச்சார்ந்தவர்கள் 100,000 பேர்.

1960 இல் 16 பேருக்குக் குருப்பட்டமளிக்கும் சடங்கில் பதக்கத்தில் அதிமேற்றிராணியார் சுதேச மொழியை உபயோகித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேசும் பேனு

## சரியான விடை :

பரிசுத்த தந்தை பன்னிரண்டாம் பத்திநாதருக்கு இலங்கைக் கத்தோலிக்கர்பற்றிய உயர்ந்த அபிப்பிராயம் தெரிவித்தவர் அக்காலத்தில் ஆரோக்கியப்பகுதியின் அமைச்சராகக் கடமையாற்றிய, காலஞ்சென்ற முன்னாள் பிரதமர் பண்டாரநாயகா அவர்களாவர்.

சரியான விடை அனுப்பியோரின் பெயர்கள் இங்கு பிரசுரிக்கப்படுகின்றன.

1. யா. வெற்றிமலர் குரூஸ்—பேசாலை.
2. ஜே. அன்ரனி மிராண்டா,—கொச்சிக்கடை.
3. செ. ஜேட்ருட் குரூஸ்,—பேசாலை.
4. க. அ. மாட்டீன் டீ பொறஸ்,—பண்டாரவளை.

## நட்டமடையும் நிறுவனங்கள் :

எங்கள்நாட்டில் பலகூட்டுத்தாபனங்கள் வருடமுடிவில் அறிக்கைகள் சமர்ப்பிக்கும்போது பெரும்பான்மையாக நட்டஅறிக்கைகளே அதிகமாகக் காணப்படுகின்றன. சென்ற வருடத்தில் உலகின் மிகப்பெரிய ஆகாயவிமானப் பிரயாண நிறுவனங்களும் மிகப்பெரிய தொகைகளை இழந்திருக்கின்றன என அறிக்கைகள் தெரிவிக்கின்றன. அவற்றுள் சில இதோ :

பிரித்தானியாவினுல் நிர்வகிக்கப்படும் பி. ஓ. ஏ. சி. விமானக்கம்பெனி 280 இலட்சம் டாலர்களை இழந்திருக்கிறது. ஸ்கந்திநேவியாவின் எஸ். ஏ. எஸ். விமானக்கம்பெனி 170 இலட்சம் டாலர்களை நட்டம்கொடுத்திருக்கிறது. மேற்குஜெர்மனியின்விமானக்கம்பெனியொன்று 250 இலட்சம் டாலர்களை இழந்துவிட்டது. நெதர்லாந்தின் கே. எல். எம். கம்பெனியார் 210இலட்சம் டாலர்களை விரயமாக்கிவிட்டனர்.

## அடுத்த வினு :

இன்று கொழும்பில் மரியாயின் சேனையாளர் தங்கள் இருபத்தைந்தாவதுவருட யூபிலியைக்கொண்டாடுகின்றனர். எனவே, எமது இவ்வாரத்திய வினுவும் மரியாயின்சேனையைப்பற்றியதாகவே அமைகின்றது.

1947-ம்ஆண்டில் இலங்கையிலுள்ள மரியாயின்சேனைப் பிரெசீடியங்களைத் தரிசிப்பதற்கென அயர்லாந்திலிருந்து அனுப்பப்பட்ட கன்சிலியப் பிரதிநிதி யார்?

விடைகளை அஞ்சல் அட்டைகளில் குறித்து, பேசும்பேனு, சத்தியவேத பாதுகாவலன், மேற்றிராசன மாளிகை யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பவும். முகவரியைத் தவறுக எழுதுவதால் சில விடை அஞ்சலட்டைகள் வேறிடங்கட்குச்சென்று மீண்டும் எம்மிடம் சேர்ந்தன என்பதைக் குறிப்பிட விரும்புகிருேம்.

## நகைச்சுவை :

பிரதம லிகிதர் : மிஸ். கமலா, நீங்கள் சிறு தவறு செய்திருக்கிறீர்கள். இந்தக் கடிதத்தில் பதினெரு மூட்டைகளில் இருமூட்டைகள் பழுதாய்ப் போய்விட்டன. ஆகவே, தற்போதுள்ளவை பத்து மூட்டைகள் எனடைப்செய்திருக்கிறீர்கள்.

மிஸ். கமலா : நல்லது. யான் இங்கே தட்டச்சுவேலை பார்ப்பவள். கணக்காளர் அல்ல என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

## அலங்கார அணிவகுப்பு :

யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு பிரபல நிறுவனத்தின் இளம் அதிபர் என்னுடன் பேசிக்கொண்டிருந்தார். இஸ்லாமியர் அவர். உங்கள் ஆலயத்துக்குப் பிரார்த்தனைசெய்ய வரும் பெண்கள் தங்கள் அலங்காரங்களை வெளிக்காட்டிக்கொள்வதற்காக வருபவர்கள் போலக் காணப்படுகிறது. ஞாயிற்றுக்கிழமைகளில் கத்தோலிக்க ஆலயங்களுக்குமுன்னல் நின்ருல நல்ல அலங்கார அணிவகுப்பைக் காணலாம் எனக் கேலிசெய்தார்.

அடுத்தநாள் ஒரு கத்தோலிக்கபெரியாருடன் பேசிக்கொண்டிருக்கும்போது இச்சம்பவத்தைக் குறிப்பிட்டேன். யேசுக்கிறிஸ்துநாதரின் பாடுகளை, அவரின் சிலுவைப்பலியை மீண்டும் நினைவுறுத்தவே திவ்வியபூசைக்குச் செல்கின்றேம். சிலுவைப்பலி துக்கத்துக்குரியதொரு நிகழ்ச்சி. நாங்கள் துக்கநிகழ்ச்சிகளில் பங்குகொள்ளும் போது வெள்ளையாடைகளுடன் செல்கிறேம். அதுபோல, கிறிஸ்து எமக்காகப்பட்ட இன்னல்களைப்பற்றித் தியானிக்கத் திவ்விய பூசைக்குச்செல்லும்போது வெள்ளை உடையுடன்செல்வதே பொருத்தமாயிருக்கும். ஆடம்பர ஆடையணிகள் பல துன்மாதிரிகைகட்குக் காரணமாயிருக்கின்றன. இங்கே பட்டின எல்லைக்குள் உள்ள ஆலயங்களில் ஆடம்பர ஆடையணிகள் மிகமோசமாகப் பரவிவிட்டன என அப்பெரியார் குறிப்பிட்டார். எங்கள் கிராமங்களும் பட்டினத்துக்கு இளைத்ததல்ல. அங்கும் இளம்பிள்ளைவாதம்போல இந்நோய் பரவியிருக்கிறது எனக்குறிப்பிட்டேன். எங்கள் கத்தோலிக்க பெண்மணிகள் சிறிது சிந்திப்பார்களா?

## இறைவனின்இரக்கத்தில் நம்பிக்கை:

அந்தப்புனிதருக்கு ஒரு சகோதரி இருந்தாள். ஒருநாள் அவள் தனது சகோதரனிடத்தில் விரைந்துவந்தாள். வீட்டுப்பாடுகள் எப்படிஎன வழக்கமான குரலில் புனிதர் வினவினர். சகோதரி அழத்தொடங்கினள். எங்கள் ஏழைத்தாயார் கடினமானவியாதியால் பீடிக்கப்பட்டுள்ளாள். வியாதியின் அகோரமும், வேதனையும், துர்நாற்றமும் மருத்துவர்களையும், தாதிமார்களையும்கிட்டநெருங்காமல்செய்துவிட்டது. நான் என்செய்வேன் என விம்மினள்

புனிதரின் நேத்திரங்கள்குளமாயின. எனினும், தன்னைச் சுயாதீனப்படுத்திக்கொண்டு கூறினர். இறைவன் இரக்கமுள்ளவர். தனது சிருட்டிப்புகட்கு அவர்களால் சுமக்கமுடியாததை அனுப்பமாட்டார். தமது இரக்கத்தை அடியார்களான ஏழைகட்குக் காட்டுவதில் பின்னிற்கமாட்டார்.

புனிதரின் சகோதரி துயரத்துடன் திரும்பிச்சென்ருள். அங்கு தனது அன்னை பூரணஆரோக்கியத்துடன் நடமாடுவதைக் கண்டு அதிசயித்தாள். இறைவனின் சித்தத்துக்குத் தன்னை ஒப்படைத்த இந்தப் புனிதரின் நாமம் அர்ச். பினியன் என்பது.

## தோளுக்குமிஞ்சினுல் தோழன் :

"ஞானேபதேச பாடத்தில் உனது சொந்த உயிரைப்பறிக்கும் உரிமை உனக்கில்லை என்பதைப் படித்திருக்கிருயல்லவா?"

"ஆம்."

"தற்கொலைசெய்தால் என்ன சம்பாவனை கிடைக்குமென உனக்குத் தெரியுமா?"

"நரகத்துக்குப் போவேன்."

இது பாடசாலையில் மாணவியின் வேத அறிவைப் பரிசோதிப்பதற்காக நடாத்தப்பட்ட சம்பாஷணையல்ல. தற்கொலைசெய் [illegible]

[4-ம் பக்கம் பார்க்க]

# இவ்வார அர்ச்சியசிட்டவர்

## யேசுசபை ஸ்தாபகராகிய அர்ச். லொயலா இன்னுசியார்

### உயர்குல சிங்கக்குட்டி

இவர் பெற்ருேர் ஸ்பானியர். உத்தம கத்தோலிக்கர். பிரபுவம்சத்தவர் தகப்பன்பெயர் டொன் பேட்ரும். தாய்பெயர் மேரி சயஸ். பெற்ருேருக்குப்11பிள்ளைகள். 8ஆண். 3பெண். கடைப்பிள்ளையாகிய இன்னுசியார் பிரினிஸ்மலைப் பிரதேசத்திலுள்ள லொயலா என்னும் கோட்டையில் 1491-ம் ஆண்டு பிறந்தவர். தமது மூத்தசகோதரைப் போலவே யுத்தப்பயிற்சியில் இவருக்கும் பெரும் ஆர்வம். சைனியத்தில் சேர்ந்து பலவெற்றிகள் ஈட்டினர். ஆனுல், பிழையாகச் சத்துராதிகளை வருத்தவோ, பொருள்களைக் கவரவோ அவர்மனம் ஒருப்படவில்லை பம்பலு என்னும் கோட்டையைக் காக்க வீரத்துடன் போராடியபோது கால் முறிபட்டுப் பாயும் படுக்கையுமானர்.

### தேவஅருள் கிட்டியது

அந்தக்காலத்திலே அர்ச்சியசிஷ்டரின் சரிதையை வாசிக்கிறபோது இஸ்பிரீத்துச்சாந்துவின் அருளினுலே தானும் அர்ச்சியசிஷ்டர்களைப் பின்செல்லத் துணிந்தார். பிரதான அப்போஸ்தலரான அர்ச். இராயப்பரிலே இவருக்கு விசேஷபக்தி. அவர் அருளினுல காயங்கள் சுகப்பட்டன. பக்தி முயற்சிகளில் தீவிரமாக இறங்கினர். பசாசும் அவருடன் தீவிரமான போராட்டம் தொடக்கிற்று. பாவத்திற் சந்தோஷத்தையும், மோக விசாரங்களையும் எழுப்பிற்று. அவர் தேவதாயின் பாதுகாப்பை நாடினர். தேவதாயாரும் இரங்கி, கேட்டவற்றை அருளினர்.

### தேவனுக்காக விசரனுனர்

பசாசின் பயங்கர சோதனைகளிலிருந்து விடுவிக்கப்பட்டவர் தனது நன்றியைத் தெரிவிப்பதற்காக மொன்செருட் நகரிலுள்ள தேவதாயாரின் ஆலயத்துக்குச்சென்ருர். போர்வீரனின் ஒய்யார தோற்றத்துடன் உட்சென்ற இன்னுசியார் ஓர் தபசியாக அங்கேயே பலகாலங் தங்கிவிட்டார். பட்டாடைகள் கைவிடப்பட்டன. உயர்தர வஸ்திரங்கள் ஆபரணங்கள் யாவும் பிச்சைக்காரருக்கு அளிக்கப்பட்டன. பிரபுவான இன்னுசியார் தெருத்தெருவாய்த் திரிந்து தனது உணவுக்குப் பிச்சை எடுத்துவந்தார். அவருக்குப் பைத்தியம்பிடித்து விட்டது என்றுசொல்லிப் பலர் நகையாடினர். சிலரோ அவரை மெச்சிப் பேசிக்கொண்டனர். நகரத்தில் இருப்பதைவிட்டு அண்மையிலுள்ள மலைக்குகையொன்றைத் தமது இருப்பிடமாக்கிக்கொண்டார். இங்கே அவருக்குத் தேவதாயாரினதும் அவரது திருச்சுதனினதும் தரிசனம் கிடைத்துவந்தது. தேவதாயார் கொடுத்த புத்திமதிகளை ஒரு ஞான சிந்தனைப்புத்தகமாக இன்னுசியார் ஆக்கிக்கொண்டார். அதன்பின்பு கஷ்டங்கள் என்ன நேரிடினும் அவற்றைப் பொருட்படுத்தாது யெருசலேம், உரோமை முதலிய புண்ணிய ஸ்தலங்களைத் தரிசித்து, திரும்பவும் தாய்நாடு திரும்பினர்.

### முதுமையிற் கல்வி

இதுகாலவரையும் தன்னைத்தானே பரிசுத்தப்படுத்துவதில் அவருடைய விசேஷ கவனஞ்சென்றது. ஆனுல், இதன்பின் பிறரது இரட்சணிய வேலையில் தன்னுலானவற்றைச் செய்யச் சித்தமானர். அதற்குக் கல்வியறிவு அவசியமெனக்கண்டு,சிறுவயதுடைய சிறுவர்களுடன் சேர்ந்து கல்விச்சாலைக்குச்சென்று கற்றுவந்தார். கல்விகற்குங்காலங்களில் போதனையினுலும் முன்மாதிரியினுலும் அநேக ஆயிரக்கணக்கானேரை நல்வழிப்படுத்தினர். தேவனது வேலைக்கு எதுவும் சிறிதாகவோ, இழிவாகவோ, கடுமையாகவோ தோற்றவில்லை. உயர்தரக்கல்விக்காகப் பரிஸ்நகரஞ்சென்ருர். யாசகஞ்செய்து தனது உணவுபெற்றுக் கலவியையுங் கற்றுவந்தார். இவரது குணவிசேஷங்களைக்கண்ட பலர் இவரைப் பின்பற்றினர். பிழைபோன பலரைத் தன்போதனையாலும் இடைவிடா முயற்சியினுலும் உண்மையை உணரச்செய்தார். இவர்களில் ஒருவர் கீழைத்தேய அப்போஸ்தலராகிய அர்ச்சியசிஷ்ட பிரான்சிஸ் சவேரியார். சர்வகலாசாலைப் படிப்புகள் முடிந்ததும் இவரையொத்தபலர் ஒன்றுசேர்ந்துகொண்டனர். குருப்பட்டம்பெற்றுத் தேவனது ஊழியத்துக்குத் தம்மை விசேஷமுறையில் அர்ப்பணஞ்செய்ய ஆவல்கொண்டு விளங்கினர்கள். இதைப்பற்றிக் கேள்வியுற்ற பாப்பரசர் இவர்களைத் தம்மண்டைஅழைத்து, அவர்களது நோக்கத்துக்கு ஊக்கம் அளித்தார்.

### யேசுசபை ஸ்தாபனம்

குருவானவராக அபிஷேகஞ் செய்யப்பட்டதன்பின்பு இன்னுசியாரும் அவரது உடன்தொண்டர்களும் பாப்பரசரின் அனுமதியுடன் யேசுசபையை ஸ்தாபித்தனர். இன்னுசியாரே அதன் முதற்தலைவர். 15 வருடகாலமாக அருந்தொண்டாற்றி, பல்லாயிரக்கணக்கானேர் இச்சபையினரின் உழைப்பினுல் திவ்வியமறையிற் சேர்ந்தனர் என்னும் ஆறுதலைப்பெற்று 1956-ம் ஆண்டு ஆடி 31-ம் திகதி தமது 65-ம் வயதில் மரணமாயினர். அவர்நிறுவிய யேசுசபையானது, இன்னுசியாரினது விருப்பத்தின்படியே தாழ்மையிலும், வறுமையிலும், தொண்டிலும், அறிவிலும் உலகெங்கும் சிறந்து விளங்கி வருகின்றது.

## அன்னையின்......

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

களிலும் பலமடங்கு அதிகமாக அவள் செய்திருந்தாள்என்பதை நிச்சயமாகக் கூறலாம்.

பெரியண்ணு : டபிளின் நகரத்தில் பிறந்த எடல் குயின் மத்தியஆபிரிக்காவில் மரியாயின்சேனையைப் பரப்பினுள். இந்தியாவில் இச்சைனியத்தை அறிமுகப்படுத்தியவள் ஆங்கில சீமாட்டியான மெக்கன்சி சிமித் என்பவள். பிரான்சுக்குச்சைனியத்தைக்கொண்டு சென்றவள் வெரோணிக்காஎன்ற அயர்லாந்துதேச நங்கை. ஸ்பெயினுக்கு அறிமுகப்படுத்தியவள் பிலிப்பைனைச் சேர்ந்த பெண். பார்த்தீர்களா இந்த அதிசயத்தை.

அப்பா : தேவன் தன் கருமங்களை நிறைவேற்றச் சிறந்தஅறிஞர்களையும், பலசாலிகளையும், புத்திசாதுரியம் படைத்தவர்களையும் அழைத்ததில்லை. அறியாமையில் மூழ்கிக்கிடந்தவர்களையும், பலவீனர்களையும், சிறுவர்களையும் கருவிகளாகக்கொண்டு பல அற்புதங்களைச் செய்திருக்கிறர். தமது கருத்துக்களை உலகுக்குத் தெரிவித்திருக்கிறர். இரட்சணிய அலுவலில் அற்புதமான வளர்ச்சியைக் காட்டி இருக்கிறர். எனவே, நாம் ஒவ்வொருவரும் மரியாயின் சேனைபோன்ற அப்போஸ்தலிக்க முயற்சிகளில் ஈடுபட்டு எம்மைப் பரிசுத்தப்படுத்திச் சாங்கோபாங்கவழியில் நடக்கவும், அதன்மூலம் அயலவர்களையும் அவ்வழிக்குக் கொணரவும் முயற்சித்தல் அவசியமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




என் செல்வச்சிறுவர்களே! உங்களுக்கு என் அன்புகனிந்த வணக்கம்.

ஞானஸ்நானத்தின்வழியாக நீங்கள் ஒரு ஞானஉயிரைப் பெற்றுக்கொண்டீர்கள். அந்த ஞானஉயிரைப்பேணி வளர்ப்பது உங்கள் ஒவ்வொருவரினதும் பெரியகடன். நீங்கள் உலகில் இருக்கும்வரை அந்த ஞானஉயிரும் இந்த மனித உடலிற்றான் நிலைத்திருக்கவேண்டும். மனிதஉடலின் மிருகநாட்டங்கள், அந்தஞானஉயிரை அழித்துவிட ஓயாது செயலாற்றியவண்ணமிருக்கும். ஞான உயிரின் சத்துராதிகளின் உடலாசை மிக முக்கியமானது. உடலாசையை வெல்லுவதற்கு உடலாசைஎன்றால் என்ன என்பதை நீங்கள் அறிவது மிகமிக அவசியம்.

மனிதஉடம்பில் மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐந்து பொறிகள் இருக்கின்றன. இவ்ஐந்து பொறிகளும் ஊறு, சுவை, ஒளி, மணம், ஓசை என்னும் இன்பங்களை நுகருந்தன்மையுள்ளவை. இவ்வகை இன்பங்கள் எல்லாம் பாவமானவை அல்ல. சில நல்லவை; சில இன்பங்கள் பாவமானவை. சிலஇன்பங்கள் பாவத்துக்குக் காரணமானவை. இவ் வேறுபாடுகள் ஐம்பொறிகளுக்குத் தெரியாது. விசுவாச ஒளிபெற்ற மனச்சாட்சிக்கு மட்டுந்தெரியும். எனவே, வேண்டுமென்றும், வேண்டாமென்றும் தீர்மானஞ்செய்யும் மனச்சாட்சி தூய்மையும் வயிரமுமுடையதாக விருக்கவேண்டும்.

மனச்சாட்சி ஐம்பொறிகளை அடிக்கியாளவேண்டும். மனச்சாட்சி பாவமான இன்பங்களையும், பாவநிமித்தமான இன்பங்களையும் விலக்கி நல்ல இன்பங்களைமட்டும் நாடவேண்டும். நல்லஇன்பத்தையும் மட்டோடுதான் நாடவேண்டும். நல்லஇன்பங்களைச் சிலதருணங்களில் ஒறுத்தும்பழகவேண்டும். இல்லையேல் பாவமான இன்பத்தையும் பாவமுகாந்தரமான இன்பத்தையும் விலக்கும் ஆண்மையை மனச்சாட்சி இழந்துவிடும்.

ஆதலால் என் அன்புச்சிறுவர்களே! துர்நாட்டமுள்ள உங்கள் உடலாகிய சத்துராதியை வெல்லுவதற்கு உங்களுக்கு நல்ல உறுதியுள்ள, வயிரமுள்ள மனச்சாட்சி அவசியம். அத்தகைய மனச்சாட்சியை உங்களுக்குத் தரும்படி நல்லயேசுவிடமும், கன்னிமரியாயிடமும் வேண்டிக்கொள்ளுங்கள். வணக்கம்.

**அன்புள்ள அண்ணா.**

## ஒரு நல்ல பரிசு

ஆமாம்... பரிசு என்றதும் யாருக்குப்பரிசு? என்னபரிசு? என்றெல்லாம் அறிய நீங்கள் மிகவும் ஆசைப்படுவீர்கள். ஆனால், நீங்கள் மோட்சம் அடையும்போது அங்கு உங்களைப்படைத்து, வளர்த்து, உடை தந்து உணவுதந்து, சுகந்தந்த இறைவனை நேரில்காண்பீர்கள் ...... இல்லையா? .... நன்று.

என்றுமே நாம் நேரில் கண்டிராத ஒருவரை. எமக்கு மிகவும் அன்பு செய்த ஒருவரை முதன் முதலாக நேரில் சந்திக்கும்போது ஏதாவது ஒரு பரிசு கொடுக்கவேண்டுமென்று உங்கள் மனதில் ஓர் ஆசை எழும் இல்லையா? உண்மைதான்; ஆனால், என்ன பரிசு கொடுக்கப்போகிறீர்கள்? பரிசும் அவருக்கு விருப்பபான பரிசாக இருக்கவேண்டும். அவர் படைத்த உலகத்திலேயே அவருக்குப் பரிசு தேடவேண்டும். மிகவும் கஷ்டமான காரியம் இல்லையா?

ஆமாம்... இதற்காக உலகின் வடதுருவத்தில் இருந்து தென்துருவத்திற்குப் போனாலும் அவருக்குப் பிரியமானதாக இந்தப் பூமியில் ஒன்றும் காணமுடியாது. ஆனால் அவருக்கு விருப்பமான மிகவும் விருப்பமான ஒருநல்ல பரிசு எம்மில் ஒவ்வொருவரிடமும் இருக்கின்றதே... அதுதான் எமது ஆத்துமம். இதுதான் அவருக்குப் பிரியமான, உகப்பான ஒரு நல்ல பரிசு.

இந்த மேலான பரிசை நாம் மாசுபடாமல், தூய்மையாகக் காப்பாற்ற வேண்டும். எமது வாழ்க்கையில் சாத்தான் இதை அபகரித்துக் கொள்ளத் தெண்டிப்பான். அந்தக் கறுத்தப்பயலுக்கு நல்ல அடிகொடுங்கள். எமது மரணநேரத்தில் இந்தக்குட்டிப்பிசாசு இந்தப் பரிசைத் தானே தட்டிக்கொண்டு போகப்பார்ப்பான். விட்டுவிடாதீர்கள்.

இந்தப்பரிசு முதன்முதலில் உத்தரிப்புத்தலத்துக்குச் செல்கின்றது. அங்கு நெருப்பில் சுத்திகரிக்கப்படுகிறது .. தங்கம் தூய்மையாவதற்கு நெருப்பில் புடமிடப்படுவதில்லையா? அப்படியே எமது ஆத்துமமும் புடமிடப்படுகிறது. பின்பு திவ்விய இரட்சகரின் அன்புக்கரங்களில் பரிசாக அளிக்கப்படுகிறது. எல்லையற்ற அன்போடு அவரும் முகம் மலர இந்தப்பரிசை ஏற்றுக்கொள்கிறார்,

நீங்களும் ஒரு நல்ல பரிசை ஆயத்தப்படுத்துங்கள்.

## குளவியும் மயக்கமருந்தும்

சிறுவர்களே வேட்டையாடிஎன்ற குளவியைக் கண்டிருக்கிறீர்களா? வீட்டிலே சுவர்களில, வீடடுக்கூரையில், மேசை அலுமாரி முதலாம் மரத்தளபாடங்களில் களிமண்ணால் கூடுகட்டி வாழும் குளவிதான் இது. "குளோறபோம்" என்ற மயக்கமருந்தைக் கண்டுபிடிக்க உதவியது இக் குளவிதானும். தனது கூட்டில் இருக்கும் புழுக்குஞ்சுகளுக்கு அவை முட்டையாய் இருக்கும்போது, புழுவாக முட்டைபொரிக்குமுன்பே இரைதேடிவைத்துவிடும்இக்குளவி. எப்படித்தெரியுமா? சிலந்திகளையும் வேறு பூச்சிகளையும் வேட்டையாடிக் கொண்டுவரும். வேட்டையாடிய சிலந்தி, பூச்சிகள் இறந்துவிடாமல் அவற்றை மயக்கித்தான் கூட்டுக்குக் கொண்டுவருகிறது குழவி. புழுவான குழவிக்குஞ்சுகள் உண்ணுமுன் குளவி பிடித்துவந்த இரைப்பூச்சிகள் இறந்து பழுதடையாவண்ணம்தான் அவற்றைத் தனது கொடுக்கினால் கொட்டி மயங்கப்பண்ணிக் கொண்டுவந்து கூட்டில் சேமித்து வைத்துவிடுகிறது இவை இறந்துவிடாமல் உணர்வு இழந்து மயங்கிப் பலநாள் அப்படியே இருக்கும்.

இந்தக்குளவியை அவதானித்துத்தான் இன்று டாக்டர்கள் ஆப்பரேஷன் செய்யுமுன் அறிவைமயக்கிவிடுகிறார்கள் அந்தக்குளோறபோம் ஊசிமருந்து [illegible] னுக்குஉதவியது [illegible]

# வினுவிடை அரங்கு

(1) யாழ்ப்பாண மேற்றிராசனக் கோயில் எப்போது ஆரம்பிக்கப்பட்டது?
(2) உலகிலுள்ள மிகப்பெரிய பட்டினம் எது?
(3) மிகப்பெரிய கிரகம் எது?
(4) எகிப்தியர் வழங்கிய எழுத்துக்கள் எவ்வகையின?
(5) பௌர்ணமி நாட்களில் கடலில் வெள்ளம் பெருகுவது ஏன்?
(6) ஜேர்மனியில் அரசர்களுக்கு என்னபெயர் வழங்கிற்று?
(7) முதல்முதல் புகைவண்டியைச் செய்தவர் யார்?
(8) இலங்கையில் அடிமைமுறையை ஒழித்த தேசாதிபதியார்?
(9) கைலஞ்சம் வாங்குவதும் கொடுப்பதும் பரவமா?
(10) தற்புகழ்ச்சிஎன்றால் என்ன?

(விடை 7-ம்பக்கம் பார்க்கவும்)

## நற்சிந்தனை

நல்லமனச்சாட்சி புனிதமானவற்றையும், தீயவற்றையும் கண்டுபிடிக்கும்.

நல்லமனச்சாட்சி மகிழ்ச்சியைக் கொடுக்கும்.

நல்லமனச்சாட்சி பொறுமையுள்ளது.

நல்லமனச்சாட்சி மனத்திருப்தியைக் கொண்டுவரும்.

உன்மனச்சாட்சி உன்னை யார் என்று உனக்குச்சொல்லும். அப்போது மற்றவர்கள் உன்னைப்பற்றி என்ன சொல்லுகிறார்கள் என்பதைக் கவனிக்கமாட்டாய்.

நல்லமனச்சாட்சி உள்ளவர்கள் துன்பத்திலும் மகிழ்ச்சியைக் காண்பார்கள்.

நல்லமனச்சாட்சி உள்ளவர்களிடம் உண்மையான பிறர்சிநேகம் இருக்கும்.

நல்லமனச்சாட்சி இல்லாதவர்களுக்குச் சமாதானமில்லை.

தீயமனச்சாட்சி எப்போதும் அச்சமும் அங்கலாய்ப்புமுள்ளதாகவிருக்கும்.

## தாயின் உள்ளம்

அன்புமொழி பேசி — என்னை
வாழவைக்கும் தெய்வம்
வேதம் நான்கும் ஓதி — என்னை
இறைவனடியும் சேர்ப்பாள்.

●

மழலைமொழி கேட்டு — அன்னை
உள்ளம் மகிழ்ந்து கொள்வாள்
அன்பும் பண்பும் சொல்லி — என்னை
வல்லோனுக்கும் தெய்வம்.

●

துன்பம் எனைத் தீண்டின் — அன்னை
துடிதுடித்துப் போவாள்
புகழுமெனைச் சேர்ந்தால் — அன்னை
பேருவகை கொள்வாள்.

●

கடவுள் தந்த தெய்வம் — அவள்
ஆற்றும் பணியும் அளவல்ல
போற்றிப்புகழவேண்டும்—அவளைப்
பேணிக் காக்கவேண்டும்.

ஜே. ஈ.

செபமாலை செபிக்கும் சேனை ஒன்றை நமக்குக் கொடுங்கள்; நாம் உலகத்தையே வெற்றிகொள்வோம்.
— 11-ம் பத்திநாத பாப்பரசர்

## இதைக்கண்டுபிடித்து இதன்வளர்ச்சிக்காகச் செபியுங்கள்

| | | | |
|---|---|---|---|
| மண்ணில் | உண்டு | விண்ணில் | இல்லை |
| பரியில் | ,, | யானையில் | ,, |
| யாழ்ப்பாணத்தில் | ,, | கொழும்பில் | ,, |
| மயிலில் | ,, | கிளியில் | ,, |
| அவனில் | ,, | அவளில் | ,, |
| சேயில் | ,, | தாயில் | ,, |
| பானையில் | ,, | சட்டியில் | ,, |

விடை: [illegible]

9-ம் வருட

## மரணஞாபகம்



பிறப்பு: 23-7-31

இறப்பு: 28-7-53

எமது செல்வப்புதல்வனும், மன்னார் அர்ச். சவேரியார் கல்லூரியின் உதைபந்தாட்டக் கோஷ்டித் தலைவனுமிருந்த செல்வன் எம்.கே அழகராசா அந்தோனி ஐயா தனது வாலிபவயதில்(22) எம்மை [illegible] இன்றோடு(23-7-58) ஒன் [illegible] பூர்த்தியாகின்றன.

"சுமந்து பெற்றெடுத்த
மைந்தா மறந்தாயோ!
பிரிந்து வருந்துகிறோம்
எம்துயர் தீர்க்கவாராயோ!
அம்மா! என்றகுரல்
ஐயோ! அடங்கியதோ!
புவிமீது மைந்தா
எம்பூரிப்பும் போனதுவோ!"

இதனைக்கண்ணுறும் சகலரையும், இவருடைய ஆத்மா சாந்தியடைய, இறைவனிடம் இரந்து மன்றாடும்படி வேண்டுகிறோம்.

"சுவாமி! இவருக்கு முடிவில்லாத காலத்தின் பேரின்ப சுகத்தைக் கட்டளையிட்டருளும் நித்தியகாலத்தின் பிரகாசம் இவருக்குப் பிரகாசிக்கக் கடவது."

இவர் பிரிவால் துயருறும்.
தாய்: க. செல்லம்மா.
தந்தை: மு. கந்தையா.

சகோதரர்கள்: யோட்ஜ் நவரட்ணம், பாக்கியபத்மாவதி, பொன்னு, சீமான், பிரான்சிஸ் சேவியர்.

இவருக்காக 28-7-62 சனிக்கிழமைகாலை மன்னார் அர்ச். தேவமாதா ஆலயத்தில் ஓர் துக்கப்பூசை சொல்லப்படும். பொதுவாக மன்னார் மக்கள் அந்தப்பூசையில் பங்குபற்றி அவருக்காக மன்றாடும்படி கேட்டுக் கொள்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோட்டுவிற்பனவு விளம்பரம்

**இல. 2928**

மானிப்பாய்
1. யூலியஸ் இராசநாயகம் குணரத்தினம்
2. பெண் தேவநேசம் குணரத்தினம்
— வழக்காளிகள்.

எதிராக
1. விகோரி ஆசீர்வாதம்
2. பெண் திரேசம்மா
யாழ்ப்பாணம், சென்பற்றிக்ஸ் றோட்டு
3. பேதுருப்பிள்ளை ஞானப்பிரகாசம்
4. றப்பியல் சந்தியாப்பிள்ளை
கைம்பெண் றெபேக்கா
5. சுவக்கின் மோசெஸ்
கைம்பெண் மேரிப்பிள்ளை
யாழ்ப்பாணம் பாங்சால்வீதி, நம். 136
6. சுவக்கின் அல்பிறெட்
பெண் மாக்கிறெற்
7. சுவக்கின் அல்பிறெற்
வண்ணார்பண்ணை தென்மேற்கு
சோனகவீதி
8. எஸ். எம். முகமட் லெப்பை
பெண் உம்மா சல்மா
9. நயினு முகமெட் லெப்பை
— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 2928-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணி 1962-ம்ஆண்டு ஆவணிமாதம் (ஆகஸ்டு) 25-ம் திகதி (25-8-62) சனிக்கிழமை முற்பகல் 10மணிதொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 9,630-ம், இதில் ரூபா 6,000-க்குப் 16-6-60 திகதிதொடக்கம், 20-3-61 திகதி வரைக்கும் 100-க்குப் 12வீதவட்டியும், பின்திகதிதொடக்கம் முழுத்தொகைக்கும் இறுபடும்வரைக்கும் 100-க்கு 5வீத வட்டியும், கோட்டுச்செலவு 470ரூபா 55சதமும்.

### காணி விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக்குளிக் கோயிற்பற்று, கரையூர்இறை "ஆளடையான் காடு" நிலப்பரப்பு 1-ம், குளி $14\frac{7}{8}$. இதில் கிழக்கே நிந்தமாகக் குளி 14-ம், கடைக் கட்டிடமும், பயிர்களும். எல்லை: கிழக்கு — சென்பற்றிக்ஸ் றோட்டு. வடக்கு — ஒழுங்கை. மேற்கு — லூக்கேஸ் சேவியருக்கும், பெண் அருளம்மாவுக்குமுரிய ஆதனம். தெற்கு — ஏ. எம். யோசெவ்வுக்கும், ஏ. எம் ஜேக்கப்புவுக்குமுரிய ஆதனம். இதடங்கலும். இது உலாந்தா யே. மனுவலால் 1952-ம்ஆண்டு சித்திரைமாதம் 9-ந்உ 607-ம் இலக்கப்படத்தில் 2Aதுண்டாகவும், D 208|77 பதிவுக்காணியில் ஒருபகுதியாகவுமுடையது.

முற்பதிவு D 233/107.

**சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை,**
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்.

தெல்லிப்பளை,
7-7-1962.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. M. B. 3622**

கோப்பாய் இருபாலை
1 சோமர் வல்லிபுரம் கந்தையாவும்
2. பெண் கனகம்மாவும்
— வழக்காளிகள்.

எதிராக
யாழ்ப்பாணம், திருநெல்வேலி கிழக்கு
1. கந்தையா ஏகாம்பரமும்
2. பெண் தங்கம்மாவும்
— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 3622-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் நாலுதுண்டுக்காணிகளை 1962-ம்ஆண்டு ஆவணிமாதம் 19-ந்உ திங்கட்கிழமை முற்பகல் 10மணிதொடக்கம் அந்தந்தக்காணிகளுக்குள்நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 3,050-ம், 16-9-60 தொடக்கம் 24-1-61 வரைக்கும் ரூபா 2,500-க்குப் 12வீதவட்டியும், அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5வீதவட்டியும், கோட்டுச்செலவு 222ரூபா 23சதமும்.

1. வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிச் வலிகாமம்கிழக்கு கோப்பாய் கோயிற்பற்று, இருபாலைஇறை "ஆண்டிராசாவின் தோப்பு" பர. நில. இலா. $2\frac{1}{2}$-யும், வீடும், செய்பயிர், வான்பயிரும், கிணறும், மேற்குப் பக்கமாகஇருக்கும் காணியில் வடக்குப்பக்கமாகப்போகும்ஒழுங்கையில் பங்கும். எல்லை: கிழக்கு — கந்தையா பெண் பொன்னுவின் ஆதனம். வடக்கு— மினுயர் தம்பிப்பிள்ளைக்குரிய ஆதனம். மேற்கு — குமாரசாமி பெண் செல்லம்மாவின் ஆதனம். தெற்கு — ஒழுங்கை இவ்வாதனம் யாழ்ப்பாணம் உறுதிப்பதிவுக் கந்தோரில் K 143/198-ம் இலக்கத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

2. ஷெயிறை "வெல்லவயல்" பர. நெல். இலா. $7\frac{1}{4}$-ம், கிணறும், செய்பயிர் வான்பயிர்களும். எல்லை: கிழக்கு — வாய்க்கால். வடக்கு — சோமசுந்தரம் பெண் கமலாம்பிகைக்கும், மறுபேருக்கும் உரியஆதனம். மேற்கு — கந்தையா பெண் பொன்னுவிற்குரிய ஆதனம். தெற்கு — வைத்திலிங்கம் மயில்வாகனத்திற்கும், சகோதரங்களுக்கும் வழிப்பாதை முகப்பும். இவ்வாதனம் யாழ்ப்பாணம் உறுதிப்பதிவுகந்தோரில் K 144|15ஆம் இலக்கத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

3. ஷெயிறை "மெத்துகமம்" பர. நெல். இலா. மூன்று (3) அல்லது சொரியலாய் 9-ல் மூன்றில் ஒருபங்கும், கிணறும், செய்பயிர், வான்பயிர்களும். எல்லை: கிழக்கு — ஒழுங்கை. வடக்கு — கணபதியார் சிவகுருவின் ஆதனம். மேற்கு — பூதர் இளைய தம்பியின் உரிமைக்காரருடைய ஆதனம். தெற்கு — இராமு ஆழ்வாப்பிள்ளைக்குரிய ஆதனம். இவ்வாதனம் யாழ்ப்பாணம் உறுதிப்பதிவு கந்தோரில் K 189/230ஆம் இலக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

4. வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் நல்லூர்கோயிற்பற்று திருநெல்வேலி இறை. "அத்திமைல்வளவும், பூதிகுடியிருப்பு சிதம்பரம்வளவும், கைலாயர்வளவும்" பர. நில. குளி $17\frac{2}{3}$-ம், கிழக்குத் துண்டுக்காணியில் இருக்கும்கிணற்றில் பங்கும், வழக்கமான வழி வாய்க்கால் பாவிப்புரித்தும், பங்கும், $8\frac{3}{8}$குளிகொண்ட மேற்குப்பக்கமாய் இருக்கும் பாதையின் உரித்தும். எல்லை: கிழக்கு — கணபதிப்பிள்ளை குமாரவேலுவுக்குரிய ஆதனம். வடக்கு — கணபதிப்பிள்ளை குமாரவேலுவுக்கும், மறுபேருக்கும் உரியஆதனம். மேற்கு — நல்லதம்பி கைம்பெண் மாணிக்கத்திற்குரிய ஆதனம். தெற்கு — சுப்பர் கார்த்திகேசுவுக்குரிய ஆதனம். இதடங்கலும். இவ்வாதனம் யாழ்ப்பாணம் உறுதிப்பதிவு கந்தோரில் D $\frac{237}{118}$ இலக்கத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

**அ. ஜெகநாதன்,**
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்.

16A, அம்மன்றோட்,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. M.B. 3041**

கட்டுடை
இராசசிங்கம் அதிதப்பிள்ளை
— வழக்காளி.

எதிராக
யாழ்ப்பாணம், நாவாந்துறைறோட்
பெரியதெரு, இல. 57
1. சேகு சுல்தான் அப்துல்காதர்
முகமத் சதுக்குத்துல்லாவும்
2. பெண் மய்முனும்
பருத்தித்துறை, புலோலி
3. நாகலிங்கம் கந்தையாவும்
— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 3041-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணி 1962-ம்ஆண்டு ஆவணிமாதம் 18-ந்உ சனிக்கிழமை முற்பகல் 10மணிதொடக்கம் அந்தக் காணிக்குள்நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 6,960-ம், 17-9-59தொடக்கம் 17-5-60 வரைக்கும் ரூபா 6,000-க்குப் 12வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5வீதவட்டியும், கோட்டுச் செலவு 251ரூபா 29சதமும். இந்தமுதல் வட்டியில் ரூபா 1,500 வழக்காளிக்குக் கொடுபட்டிருக்கிறது.

### ஆதன விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் வண்ணார்பண்ணை கோயிற்பற்று வண்ணார்பண்ணை தென்மேற்கிறை, "புளியடி" பர. நில. இலா. 1-ம் (ஒன்று), குளி $6\frac{1}{2}$-யும். யாழ்ப்பாணம் காணிப்பதிவுகந்தோரில் D 196/249-ம் இலக்கத்தில் பர. நில. இலா. 1 (ஒன்று), குளி $\frac{7}{8}$என்றும் காண்பிக்கப்பட்டிருக்கிறது. இத்துடன் கல்வீடும், கிணறும், பயிர்வகைகளும், மற்றும் அதைச்சேர்ந்தவைகளும். எல்லை: கிழக்கு — ஒழுங்கை. வடக்கு — முகலீன் லெப்பையின் உரிமைக்காரரின் ஆதனம். மேற்கு — சாகுல் கமீத் முகம்மத்லெப்பை கைம்பெண் முகமத் பதும் மாநாச்சியாவின் ஆதனம். தெற்கு — சாலில் கமீத் முகமத்லெப்பை கைம்பெண் முகமத் பதும் மாநாச்சியாவின் ஆதனமும், நாவாந்துறை றோட்டும். இவ்வாதனம் யாழ்ப்பாணம் காணிப்பதிவுகந்தோரில் 253/163-ம் இலக்கத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

**அ. ஜெகநாதன்,**
கொமிஷனரும், விலமதிப்பாளரும்

16 A, அம்மன் றோட்,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

> மனச்சஞ்சலத்திற்கு இடங் கொடாதே. ஏனெனில், மன அமைதியில்லாவிடில் நீ சர்வேசுரனோடு பேசமாட்டாய். நம்பிக்கையும் தளர்வடையும். நீ தேவ [illegible]குளிர்ந்தவனாய் அச[illegible]வனாய்ப் போகலாம்.

## 2-ம்வருட மரணஞாபகம்



தோற்றம்: 1-2-1934 மறைவு: 31-7-1960

"...ாழ்விலே நேசித்தவர்களே, மரணத்திலும் மறவாதீர்கள்."

இவர் பிரிவால் துயருறும்,

பெற்றோர்:
யுவான் சில்வா கிறிஸ்தோகு புள்ளே
மரியா றெஜீனு.

சகோதரி:
ஜே. வெரோனிக்கா சில்வா புள்ளே

மைத்துனர்:
சி. போல் பெர்னண்டோ புள்ளே.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. M. B. 3966**

வட்டுக்கோட்டை கிழக்கு
வைரமுத்து கார்த்திகேசு கைம்பெண்
நாகரெட்டினம் — வழக்காளி

எதிராக
வட்டுக்கோட்டை கிழக்கு
சிவகுருநாதர் கந்தையா — எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 3966-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணி 1962-ம்ஆண்டு ஆவணிமாதம் 25-ந்உ (25-8-62) சனிக்கிழமை முற்பகல் 10மணிதொடக்கம அந்தக் காணிக்குள்நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 3,880-ம், இதற்குத்தீர்வை ரூபா 3,000-த்துக்கு 20-3-61 திகதிதொடக்கம் 7-9-61 திகதிவரைக்கும் 100-க்குப் 12வீதவட்டியும், பின் முழுத்தொகையும் இறுபடும் வரைக்கும் 5வீதவட்டியும், கோட்டுச் செலவு 267ரூபா 35சதமும்.

### காணி விபரம்

வடமாகாணம், வவுனியா டிஸ்திறிக் வவுனியாவடக்கு கோரளை உடையாயூர் பற்று, கனகராஜன்குளம் வெளியும், கனகராஜன் காடும், ஆலடித்தறையும், சித்திரகாலித்தறையும், புளியடியில் வளவும், புளியடியிற் தோட்டமும், பெரியபுலத்தறையும், ஆலடிக்கமமும், கனகராஜன் குளமும், காடும் — 29ஏக்கர். இதற்கு எல்லை: கிழக்கு — ஆறு. வடக்கு — முடிக்குரிய காடு. மேற்கு — அழகரட்ணம் கைம்பெண் ராசலட்சுமிக்கும், நாகலிங்கம் கைம்பெண் பாக்கியலட்சுமிக்கும் மறுபேருக்கும் உரியஆதனம். தெற்கு — வேலுப்பிள்ளை செல்லத்துரைக்கும், மறுபேருக்கு[illegible] உரியஆதனங்கள். இதில் சொரியலாய் $\frac{1}{5}$பங்கு.

பதிவிலக்கம் D 10/143

**சி. செ. மாரிமுத்து.**
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்

"விதானை வளவு,"
சித்தன்கேணி, 9-7-62.

---

றோசாப்பூவானது தனது நிறத்தையும் வாசனையையும் வேரிலிருந்து பெற்றுக் கொள்ளுகின்றது. மனிதனே இளம் பருவத்திலிருந்தே தனது நற்குணங்களையும், புண்ணியங்களையும் பெற்றுக்கொள்ளுகிறன்.

---

1. யாழ்ப்பாண மேற்றிராசனக்கோயில் 1789-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 1794-ல் பூர்த்தியாக்கப்பட்டது.
2. உலகிலுள்ள மிகப்பெரிய பட்டினம் இலண்டன். 700 சதுரமைல் விஸ்தீரணமுள்ளது.
3. மிகப்பெரிய கிரகம் வியாழன்.
4. எகிப்தியர் சித்திர எழுத்துக்களை வழங்கிவந்தனர்.
5. சந்திரனின் கவர்ச்சி பௌர்ணமி நாட்களில் அதிகமாக விருப்பதால் கடலில் வெள்ளம் பெருகுகிறது.
6. ஜேர்மனியில் அரசர்களுக்கு 'கெய்சர்' என்னும் பெயர் வழங்கிற்று
7. முதல்முதல் புகைவண்டியைச் செய்தவர் இஸ்டீபின்சன் என்பவர்.
8. இலங்கையில் அடிமைமுறையை ஒழித்த தேசாதிபதி சேர் கொலின் காம்பெல்.
9. கைலஞ்சம் கொடுப்பவன் தனக்குச் சாதகமாக ஒரு அதிகாரி அல்லது வேலைக்காரன் தன் கடமைக்கு மாறாக யாதாமொரு காரியம் செய்யும்படி அவனுக்குக் கொடுக்கும்பணம் அல்லது பொருள் கைலஞ்சமெனப்படும். கைலஞ்சங்கொடுப்பது பாவம். அது நீதிக்குவிரோதமான நோக்கத்துடன் கொடுக்கப்படுகிறது. இன்னொருவன் தன்கடமையில் தவறுவதற்கு அதுகாரணமாக இருக்கிறது. கைலஞ்சம் வாங்குவதும் பாவம். ஏனெனில், நீதியற்ற ஒருகாரியஞ்செய்ய உடன்படுவதாகும்.
10. ஒருவன் தன்னிடம் இல்லாத நற்குண நற்செயலைத் தன்னிடம் இருப்பதாகச் சொல்லுவதும்; உள்ளதைப் பெருக்கிச்சொல்லுவதும்; தனக்கில்லாத அறிவும் ஆற்றலும் இருப்பதாகச் சொல்லுவதும்; பெருக்கிச் சொல்லுவதும்; தான்செய்த பாவத்தையொரு பெருமையாகப் பாரா[illegible] சொல்லுவதும் தற்பெருமையாகும். தற்புகழ்ச்சியில் [illegible] கலந்திருப்பதால் அது ஒரு தீயகுணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உல்லாசவேளை — நமது நிருபர் அமலன்

# அன்னையின் படையணி


- இணையற்ற சேவை
- அன்னையின் அனுசரணை
- பிராங்க் டவ்ப்
- எங்கள் மேற்றிராணியார்
- பதினோராம் பத்திநாதர்
- கைப்புத்தகம்
- பன்னிரண்டாம்பத்திநாதர்
- எடல் குயின்
- சேனையைப் பரப்பியோர்


அம்மா: கொழும்பில் ஏதோ பெரிய கொண்டாட்டமாம். சுவாமியார்பிரசங்கத்தில் சொல்வதைக்கேட்க இந்தப் பிள்ளைக்காலிகள் விட்டால் தானே. பிரசங்கமும் தொடங்கச் சொல்லிவைத்தாற்போல் அவைகளும் ஒப்பாரிவைக்கத் தொடங்குகின்றன.

அப்பா: இலங்கையில் மரியாயின் சைனியம் ஆரம்பிக்கப்பட்ட இருபத்தைந்தாம்வருட விழாவைக் கொண்டாடுகிறார்கள். சித்திரை மாதத்தில் [illegible] பத்துக்கு ஒரு சிறப்பல்லவா?

பெரியண்ணா: லூர்துகெபியிலும், பாத்திமாபதியிலும் தனது வேண்டுகோள்களை விடுத்தபின்னர் அவற்றை நிறைவேற்றும் பொறுப்பை இல்லற அப்போஸ்தலர்களில் மரியன்னை சுமத்திவிட்டாள் என்று கூறலாம். இந்த இருபதாம்நூற்றாண்டின் இணையற்ற அப்போஸ்தலிக்க சேவைதான் மரியாயின் சைனியமென ஒரு கர்தினால் குறிப்பிட்டுள்ளார்.

நிர்மலா: எங்கள் திருச்சபையில் எத்தனையோவிதமான பக்திச்சபைகள் இருக்கின்றன. ஆயினும், மரியாயின் சைனியத்தைப்போலக் கண்டிப்பாக, திட்டவட்டமாக, சிறப்பாகத் தொண்டாற்றுவதில் வேறு சபைகள் இல்லையென்றே கூறலாம்.

பெரியண்ணா: மரியாயின் சைனியத்தைப் புகழ்ந்து பேறிஞர் புல்டான் சீன் ஆண்டகை பின்வருமாறு கூறுகிறார்: கிறிஸ்துநாதருக்குப் பன்னிரு சீடர்கள் இருந்தார்கள். ஆயினும், அவர் மரணவஸ்தைப்பட்டு உயிர்விடும் போது சிலுவையடியில் நின்றவர் ஒருவர்தான். அந்த ஒருவரும் அங்கிருந்ததற்குத் தேவதாயே காரணம். அதுபோல அவ்வன்னையின் பாதுகாவலில் அவளை முன்னோடியாகக் கொண்டு சேவையாற்றும் இச்சைனியமும் சிறப்புப் பெறுவதில் அதிசயமில்லை.

கார்மெலா: இச்சைனியத்தை ஆரம்பித்தவர் இன்னமும் உயிரோடிருக்கிறாராமே.

அகஸ்ரின்: ஆம். அயர்லாந்து தேசத்தில் அரசாங்க சிவில்சேவையிலிருந்த பிராங்க் டவ்ப்என்ற கனவான் 1921-ம் ஆண்டு புரட்டாதிமாதம் ஏழாமநாளில் இச்சைனியத்தை ஆரம்பித்தார். சேனைவிருத்தியடைய அவரின்சேவையும்அதிகமாகியது. எனவே, சொற்பகாலத்தின்பின் தமது உத்தியோகத்திலிருந்து விலகித் தமது முழு நேரத்தையும் மரியாயின் தொண்டுக்கே அர்ப்பணித்துவிட்டார்.

அப்பா: தேவ ஏவுதலினால் இச்சைனியத்தை ஆரம்பித்துச் சிறப்பாக நிர்வகித்துவரும் அந்தமனிதரை வாழ்ந்துகொண்டிருக்கும் ஒரு புனிதர் எனப் பலர் அழைக்கின்றனர்.

பெரியண்ணா: எங்கள் யாழ்ப்பாண மேற்றிராணியார் இங்கிலாந்துக்குச் சென்றிருந்தபோது டப்ளின் நகருக்கும் சென்று டவ்ப் அவர்களுடன் மூன்று மணித்தியாலங்கள் சம்பாஷித்தாராம். தமக்கு இம்மூன்று மணித்தியாலங்களும் ஒரு ஞானவொடுக்கம் செய்ததுபோல இருந்தது என மேற்றிராணியார் இச்சந்திப்பைப்பற்றிக்குறிப்பிடுகிறார்.

அகஸ்ரின்: கொழும்பு மேற்றிராசனத்தில் சேனையின் விசாரணைக்குருவாகக் கடமையாற்றிய வண. பிதா பின்ரோ அயர்லாந்துக்குச் சென்றிருந்தபோது அவரும் இந்தக்கனவானைச் சந்தித்தாராம். வெகுசுலபமாகத் தமதுள்ளத்தைக்கவர்ந்துகொண்ட அந்தமனிதர் நகைச்சுவையாகவும், பண்புடனும் அளவளாவினர் எனவும் ஒரு நல்ல தோழனைப்போல அவர் காட்சியளித்தார் எனவும் அச்சுவாமியார் கூறுகிறார்.



இயூஜின்: மரியாயின் சேனையைத் தாபித்த சிலவருடங்கட்குப் பின்னர் திரு. பிராங்க் டவ்ப் அவர்கள் உரோமை நகர்சென்று பதினோராம் பத்திநாத பாப்பானவரைச் சந்தித்தார். மரியாயின் சைனியம் செய்துவரும் சேவையைப்பாராட்டிய பாப்பரசர், சைனியம் திருச்சபையில் எத்தகைய இடத்தையும் கௌரவத்தையும் விரும்புகிறது எனக்கேட்டார். மரியாயின் சேனை கௌரவத்தை விரும்பவில்லை. திருச்சபையின் தலைமையில், குருக்களின் வழிநடத்துகையில் தொண்டாற்றவே அது ஆசிக்கிறதுஎன டவ்ப் பதிலளித்தாராம். இதிலிருந்து சேனையின் நோக்கம் தெளிவாகிறதல்லவா?

அகஸ்ரின்: டவ்ப் அவர்களைப்பற்றி இன்னொரு செய்தியைச்சொல்ல விரும்புகிறேன். இத்தாலிதேசத்தில் சுமார் பத்துவருடங்கட்குமுன்னர்தான் மரியாயின் சேனை ஸ்தாபிக்கப்பட்டது. எனவே, சேனைமுறைகளைத் தங்கட்குப் பயிற்றுவிப்பதற்கு அனுபவமுள்ள ஒரு சேனையாளை அனுப்புமாறு டவ்ப் அவர்களைக் கேட்டுக்கொண்டார். சேனை நடபடிகளை நன்கறிந்த இளம் நங்கையொருத்தியை அவர் அனுப்பினார். இத்தாலியிலிருந்த அயர்லாந்து தேசத்தூதர் ஆத்திரம்கொண்டார். இந்தக்குழந்தையால் என்னசெய்ய இயலும்என ஒரு தந்திச்செய்தியை அவருக்குஅனுப்பினார். பிராங்க் டவ்ப் உடனே தந்திமூலம் பதில் அனுப்பினார். மரியாயின்சேனையை நடாத்துவதில் உங்களாலும், என்னாலும்கூட ஒன்றும்செய்ய இயலாது திவ்விய இஸ்பிரீத்து இல்லாவிடில், எனத்தந்தியில் காணப்பட்டது.

பெரியண்ணா: எத்தனையோமுறைகளில் பல பிரச்சினைகளைப்பற்றிச் சேனையாளர்கள் அவரிடம் முறையிடுவார்களாம். இதற்கெல்லாம் அவர் கூறும் பதில் இதுதான்: கைப்புத்தகத்தைப் படியுங்கள். அதில் எல்லாப் பிரச்சினைகட்கும் பதில் உண்டு என்பதுதான்.

அஞ்சலா: சேனையின் கைப்புத்தகம் ஒரு களஞ்சியம். அதை வாசிக்க வாசிக்க எத்தனையோ நல்ல கருத்துகள் வெளியாகின்றன. எனினும், தமிழ் மொழிபெயர்ப்புச் சிறப்பாக அமையவில்லை. எங்கள் நாட்டுக்கேற்க மொழிபெயர்ப்பின் இன்னும் எவ்வளவோ நன்மையாயிருக்கும்.

அன்ரன்: ஒருநாள் காலஞ்சென்ற பன்னிரண்டாம் பத்திநாதரைப்பேட்டி காணபதற்காகப் பலகுருமார் சென்றிருந்தார்களாம். பேட்டியறையில் பாப்பாசர் அவர்களை வரவேற்றபோது சீனாவிலிருந்து வந்த குருவரொருவர் தமது சப்பாத்தின் உள்ளறையைக் கழற்றி அதிலிருந்து ஒரு கடிதத்தை எடுத்துப் பரிசுத்த தந்தையிடம் கொடுத்தார். வேதகலாபனை நடைபெற்றுக்கொண்டிருந்த அத்தருணத்தில் சீனாவிலிருந்து மரியாயின்சேனையைச்சேர்ந்த அங்கத்தவர்கள் சிலர் திருச்சபையின் தலைவருக்கு எழுதிய கடிதம அது. எங்களை எவ்வித இன்னல்களுக்குள்ளாக்கினாலும், எங்கள் குருக்களை ஒழித்தாலும்கூடக் கிறிஸ்துவை மறுதலியோம். திருச்சபைக்குப் பிரமாணிக்கமாக இரட்சணிய அலுவலில் தொடர்ந்து ஈடுபடுவோம் எனக் கடிதம் கூறியது. அதைப் படித்த பரிசுத்த தந்தையின் இருவிழிகளிலுமிருந்து கண்ணீர்த்துளிகள் சொரிந்தனவாம்.



கார்மெலா: பெரியத்தானுக்கும், பெரியண்ணாவுக்கும் தெரியாத இந்த விஷயத்தை அன்ரன் சொல்லிப்பெயரெடுத்துவிட்டானே.

நிர்மலா: பெரியவர்களால் செய்துமுடிக்கவியலாதிருந்த பல கருமங்களை இளைஞர்களும் சாதித்திருக்கிறார்கள் இறைவனின் உதவியுடன். ஒருசேனையாளரான எடல் குயின் பல சாதனைகளை நிறைவேற்றவில்லையா?

அன்ரன்: யார் இந்த எடல்குயின்?

அகஸ்ரின்: மத்திய ஆபிரிக்காவில் மரியாயின் சைனியத்தைப் பரப்பச் சென்று அங்கு இறைவனின் தொண்டிலேயே தன் சொற்பஆயுளையும் செலவிட்ட இளநங்கை அவள். 1907-ம் ஆண்டில் பிறந்தவள். 1025-ல் சுருக்கெழுத்து, தட்டச்சுவேலையில் சேர்ந்தாள். இரண்டு வருடங்களின்பின்னர் அவளது தோழியொருத்தி அவளை மரியாயின் சைனியத்துக்கு அழைத்துவந்தாள். சைனியத்தின் அமைப்பும், புனிதமும், நிர்வாகமும், தொண்டும் அவளை நன்கு கவர்ந்துகொண்டன. சிறிதுகாலத்துள் சிறந்த சேனையாளர் ஆகிவிட்டாள்.

நிர்மலா: பிராங்க் டவ்ப் பற்றிக் கூறும்போது இத்தாலி அதிகாரிகள் குழந்தைஎன அழைத்தார்கள் எனக் குறிப்பிட்டீர்களே. அதுபோல ஒரு சம்பவமும் எடல் குயினைப்பற்றி நடந்தது. அயர்லாந்தில் ஒரு பிரசீடியத்தின் தலைமைப்பதவி இன்னல்கள் நிரம்பியதாகக் காணப்பட்டது. பாட்டாளிகளும், தீயஒழுக்கமுள்ள பெண்களும் வசிக்கும்பகுதியில் சேவையாற்ற வேண்டும். கஷ்டம்நிறைந்த வேலை அது. எனவே, சிறந்த நிர்வாகியான ஒரு தலைவரை அனுப்பும்படி சேனையாளர் டப்ளினுக்கு விண்ணப்பித்தனர். எடல் குயின் அப்பதவிக்கு அனுப்பப்பட்டாள். இந்தக்குழந்தையால்என்ன செய்ய இயலும் எனச் சேனையாளர் பங்குக்குருவரிடம் கேட்டனர். அவர் பதில்சொல்லாமல் டப்ளின்நகருக்குச் சென்று சேனைத்தலைமையதிகாரிகளைச் சந்தித்தார். அங்கு கிடைத்த பதில் அவரைத் திருப்தியடையச் செய்யவில்லை. சிலவாரங்கள் சென்றன, சேனையாளர் தாம் இணையற்ற தலைவரொருவரைப் பெற்றிருப்பதாக உணரத்தொடங்கினர். அதையிட்டுப் பெருமையும் கொண்டனர்.

பெரியண்ணா: இவ்விதமே பல இடங்கட்கும் சேனையின் அபிவிருத்திக்காக அனுப்பப்பட்டாள் எடல். ஆயின், அவளது ஓய்வற்ற தொண்டுகள் காசவியாதியைக் கொணர்ந்தன. மருத்துவமனையிலும் அவள் ஓய்ந்திருக்கவில்லை. அயலவர்கட்குத் தன்னாலியன்றவண்ணம் தொண்டாற்றினாள். மருத்துவமனையிலிருந்து வெளியேறிய சொற்பகாலத்தின் பின்னர் வேல்ஸ் நகரத்தில் சேவையாற்றத் தொண்டர்கள் சேர்க்கப்பட்டனர். முதலாவதாகப் பதியப்பட்டவள் எடல்தான். ஆயின், இறைவன்சித்தம்வேறாயிருந்தது. ஆபிரிக்காவில் சேனையின் விருத்திக்கு ஒருதொண்டர் தேவைப்பட்டார். மத்திய ஆபிரிக்காவுக்குச் சேனையின் பிரதிநிதியாகப் புறப்பட்டுச் சென்றாள் இந்தவீரவனிதை. 1936-ல் காசநோய் மீண்டும் அடிக்கடி தலைகாட்டியது. நோயின் துன்பங்களைப் பொறுமையுடன்சகித்தவண்ணம் அன்னைக்காகச் சேவையாற்றினாள் எடல்.



கார்மெலா: இப்புனிதையின் தொண்டுகளைப்பற்றியும் சொல்லுங்கள்.

அகஸ்ரின்: உண்பதற்கும், உறங்குவதற்கும் அவள் எடுத்துக்கொண்ட நேரம் வெகு சொற்பம். மீதிக்காலமெல்லாம் இரட்சணிய அலுவலில் செலவிடப்பட்டது. சேனைகளை ஸ்தாபிப்பதும், அதன்மூலம் இரட்சணிய அலுவலுக்கான படையணிகளை அதிகரிப்பதும் அவளின் பிரதான இலட்சியங்களாயிருந்தன. அந்த இலட்சியத்தில் அவள் வெற்றிபெற்றாள். ஏராளமான பிரசீடியங்கள் அவளுடன் கைகோர்த்தவண்ணம் அப்போஸ்தலிக்க தொண்டில்பங்குகொண்டனர். ஆயின், அதற்கு முக்கிய காரணமாயிருந்தவள் மரணப்படுக்கையில்கிடந்தாள். 1944-ம் ஆண்டு வைகாசிமாதம் 12-ந் தேதி இந்த வீரவனிதை மரித்தாள். அப்போது வயது 37தான். ஆயின், அந்த வயதுள்ள பலர் செய்யக்கூடிய சேவை

(5-ம் பக்கம் பார்க்க)

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Sunday July 29-1962

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இலங்கை, மரியாயின் சைனிய
# கால்நூற்றுண்டுச் சிறப்பிதழ்

**1937** **1962**

சந்திரனைப்போல ரூபவதியாய், சூரியனைப்போல இலங்குகிற வளாய், படையணியைப் போலப் பயங்கரம் உறுத்து கிறவளாய், அருணோதயம் போல எழுந்துவருகிற இவள் யார்?

*(சங். 6 : 9)*



அவளைப் பின்சென்றுல், வழி தவறேம். அவளைப் பிரார்த் தித்தால், மனங் கலங்கோம். அவளைத் தியானித்தால், அலைந்து திரியோம். அவள் தாங்கிநின்ருல், சாய்ந்து விழி யோம். அவள் பாதுகாத்தால், பயங்கொள்ளோம். அவள் வழிச் சென்ருல், களைப்புறேம். அவள்கிருபை பெறின், நித்தி யம் சேர்வோம்.

*(அர்ச். பெர்னுந்து)*

**அக்கன்னிகையின் பெயர் மரியம்மாள்** — லூக். 1 : 27

---

## சிறந்த சமூக வாழ்வைப் போதிக்கும் இயக்கம்

— இந்திய அப்போஸ்தலிக்க ஸ்தாளுபதி

சனசமூகத்துக்கும் அதன் அங்கத்தவர்கட்கும் இல்வாழ்வுபற்றிய சிறந்த அறிவு மிகமிக அவசியமானது. இல்லற சீவியம்பற்றிய தவருன கொள்கைக ளும், ஆபாச அப்பியாசங்களும் மலிந்துள்ள இக்காலத்தில் உங்கள் வெள்ளி விழாவின் முக்கிய கருத்தாக இதனைத் தெரிந்திருப்பது வரவேற்கத்தக்கது.

மரியாயின் சேனை ஆரம்பிக்கப்பட்ட சொற்ப காலத்துள் தனது அங்கத்த வர்களையும், இல்லங்களையும் சமூகத்தையும் அறநெறியில் பயிற்றுவதில் தனக் குள்ள வல்லமையை நன்கு நிரூபித்துவிட்டது.

ஈழத்தில் சேனையின் இருபத்தைந்து வருட நிகழ்ச்சிகளை ஆராயுமிடத்து சேனையாளர் தங்கள் சேவைகளையெண்ணித் திருப்தியடைய இடமுண்டு. இதையன்றி இறைவனைத் தோத்திரிப்பதுடன் கடந்த அனுபவங்களைத் துணை யாகக்கொண்டு வருங்காலத்தில் இன்னும் திறமையாக இல்வாழ்விலும் சன சமூகத்திலும் அதிகதிருத்தங்களை எதிர்பார்க்க முடியும்.

இவ்விழாவில் பங்குபெறும் அனைவருக்கும் சகல நன்மைகளையும் விரும்பி எமது அப்போஸ்தலிக்க ஆசியை அருளுகிறேம்.

✠ **J. R. நொக்ஸ்,**
அப்போஸ்தலிக்க ஸ்தாளுதிபதி.

புதுடெல்லி,
**17-4-62,**



**1956-ல் மருதமடுவில் நடைபெற்ற சேனைச் சமாகமத்தில் ஒரு காட்சி**

## பொதுச்சங்கத்துக்காக சைனியத்தாரின் செபஉதவி தேவை

— கொழும்பு அதிமேற்றிராணியார்



மரியாயின் சேனையின் கடந்த காலச் சேவைகள் எங்களது அன்பையும், நம்பிக்கையையும் ஒருங்கே கவர்ந்துள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றேம். சேனையாளர் தங்கள் வெள்ளி யூபிலி விழாவைக் கொண்டாடும் இச் சந்தர்ப்பத்தில், இரு பணிகளைச் சேனையாளருக்கு அறிமுகப் படுத்த விரும்புகிறேம்.

எங்கள் பாடசாலைகளை இழந்துவிட்டோம். எனவே, கத்தோலிக்கசிறுருக்கு வேதக் கல்வி கற்றுக் கொடுப்பதில் உங்கள் ஆதரவையும், ஒத்துழைப்பையும் எதிர் நோக்குகின்றேம்.

கிறிஸ்துவின் ஞானச் சரீரத்தில் மரியாய்க்குத் தகுந்த ஸ்தானம் அளிக்கப் படுதல் வேண்டும். ரோமாபுரியில் கூடவிருக்கும் பொதுச் சங்கம் இக்கருத்தை நன்கு ஆராயவேண்டும். சங்கத்துக்குச் சமுகந்தரும் அனைவரையும் திவ்விய இஸ்பிரீத்து தமது ஞான வெள்ளத்தால் நிரப்புதல் வேண்டும். மரியாயின் கொடியின்கீழ் தொண்டாற்றும் சேனையாளர் அனைவரும் பரிசுத்ததந்தையின் வேண்டுகோளுக்கிணங்க இக்கருத்துகட்காகத் தங்கள் செபதப உதவிகளை அளித்தல் அவசியம்.

இம்மகாநாட்டின் நிர்வாகிகட்கும், பங்குபெறும் ஒவ்வொரு சேனையாள ருக்கும் மரியன்னையின் ஆசிகளை மனப்பூர்வமாக வேண்டுகின்றேம்.

✠ **தோமஸ் கூரே,** O. M. I.
கொழும்பு அதிமேற்றிராணியார்

மேற்றிராசன மாளிகை,
கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருபதாம் நூற்றாண்டின் அற்புத இயக்கம்



இன்று நூற்றுக்கணக்கான மரியாயின் சேனையாளர் கொட்டாஞ்சேனையில் ஒன்றுகூடுகின்றனர். இலங்கையில் தங்கள் சைனியம் நிறுவப்பட்ட இருபத்தைந்தாவது வருட விழாவைக் கொண்டாடுகின்றனர். இலங்கையிலுள்ள கத்தோலிக்க திருச்சபையினதும், இல்லற அப்போஸ்தலர்களினதும் வரலாற்றில் இது ஒரு சிறப்புமிக்க நிகழ்ச்சியாகும்.

### ஆரம்பமும் வளர்ச்சியும்

1921-ம் ஆண்டு தேவ அன்னை பிறந்த தினத்துக்கு முன் தினம், அன்னையின் பக்திக்கு முக்கியத்துவம் பெற்ற அயர்லாந்து தேசத்தில் இச் சைனியம் அவதரித்தது. முதல் இருபது வருடங்கட்குள் அமெரிக்கா, அவுஸ்திரேலியா, தென்னுபிரிக்கா, சீனு தேசங்கட்குப் பரவியது. இல்லற அப்போஸ்தொலிக்கத்துக்குச் சேனை பெரிதும் உதவியாயிருந்தமையால் குருக்கள் இதற்குப் பெரிதும் வரவேற்பு அளித்தனர். இலங்கைத் தீவிலும் இச்சைனியம் 1937-ல் வித்திட்டது.

சென்னையிலிருந்த செனுத்துஸ் சபையுடன் இணைக்கப்பட்டதாக யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் சில பிரெசீடியங்கள் இயங்கின. 1945-ம் ஆண்டளவில் ஆங்கில, தமிழ் பேசும் பகுதிகட்குச் சைனியம் மிகவும் வேகமாகவும் திறமையாகவும் பரப்பப்பட்டது. 1950-ல் சேனையின் கைப்புத்தகம் சிங்களத்தில் மொழிபெயர்க்கப்பட்டபின் இலங்கை முழுவதிலும் பிரெசீடியங்கள் தீவிரமாக நிறுவப்பட்டன. இன்று இலங்கையில் ஒவ்வொரு மேற்றிராசனத்திலும் சேனை உற்சாகமாகவும் ஆர்வத்துடனும் இரட்சணிய அலுவலில் உழைத்துவருகின்றது.

கடந்த இருபத்தைந்து வருடங்களிலும் மரியாயின் சேனை, திருச்சபைக்கு எத்தகைய கத்தோலிக்க சமூகசேவைகளையும் ஆற்றுவதற்கு அதன் கைப்புத்தகமும், சட்டதிட்டங்களும் இடந்தரும் அளவுக்கு உபயோகமாக விளங்கியது. பல வழிகளாலும், சிறப்பாக ஆன்மாக்களுடன் நேரடியாகத் தொடர்பு கொள்வதன்மூலமும் விசுவாசத்தை விட்டுவிலகிய பலரை மீண்டும் மந்தையில் சேர்க்க உதவுகிறது. சமயத்தில் அனுசரணையற்ற கத்தோலிக்கரை உறுதியாக்கவும், கத்தோலிக்கரல்லாதார் உண்மையொளியைக் காணச் செய்யவும் மக்களிடையே பிறர் சிநேகம் அதிகரிக்கவும் சைனியம் வழிகாட்டுகிறது.

### சேனைமுறையும் நிர்வாகமும்

சேனையின் அப்போஸ்தலத்துவ அடிகோலாக இருப்பது அதன் உன்னத ஞானப்பக்தி. சேனை அர்ச். லூயிமரிய டி மோன்போட்டின், மரியாயின் உண்மைப்பக்திமூலம் அங்கத்தவர்களை கன்னிமரியாளுடன் ஒன்றிக்க முயலுகிறது அவர்கள் தங்கள் சேவையில் பிறரில் கிறிஸ்துவையே கண்டு அவர்களில் அவருக்கே பணிவிடை செய்யவேண்டுமென்றும் கற்பிக்கிறது. இந்த உன்னத நோக்கத்தைச சேனையாளர் மனதில் உறுதிப்படுத்தி இலௌகீக எண்ணங்களை அவர்களின் அப்போஸ்தலத்திலிருந்து அகற்ற எத்தனிக்கிறது.

மேற்கூறிய பக்தியுடன் சேனை ஒரு சிறந்த திட்டமிடப்பட்ட முறையைச் சேர்த்திருக்கிறது. இதன்படி அங்கத்தவர்கள் வாராந்திர கூட்டங்கட்குச் சமுகமளித்து அக்கூட்டத்தில் தாங்கள் செய்த ஊழியத்தின் அறிக்கைகளைச் சமர்ப்பிக்கிருர்கள். அங்குதான் வேலைகளும் நியமிக்கப்படுகின்றன. சேனை தனது ஒழுங்குமுறைகளைக் கண்ணியமாய்ப் பாதுகாத்து வருகின்றது. இவ்விதமே ஞானப்பக்திகளும், ஒழுங்குமுறைகளும் சேனையாளரைச் சாங்கோபாங்க வழியில் ஒழுகச்செய்யும் என்பதைச் சேனை அனுபவத்தால் நன்கு அறிந்திருக்கிறது.

இச்சேனைமுறை சிறந்த நிர்வாகத்திலமைந்தது. சாதாரண சைனியங்கள் பிரெசீடியங்கள் என அழைக்கப்படும். பல பிரெசீடியங்களின் உத்தியோகத்தர்கள் சேர்ந்து கியூரியா எனப்படும் நிர்வாக சபைகள் இயங்குகின்றன. அதற்கு மேலாக உள்ளது கமிசியம். பல கமிசியங்களை செனுத்துஸ் நிர்வகிக்கிறது. இச் செனுத்துஸ் சபைகட்கு மேலாக டபிளின் நகரில் கன்சீலியம் என்ற உயர்ந்த தலைமைப்பீடம் உண்டு.

### சேனைபெற்ற சிறப்புகள்

கடந்த காலங்களில் மரியாயின் சைனியம் பாப்புமாரினதும், திருச்சபையின் இளவரசர்கள் எனப்படும் கருதினுல்மாரினதும் பாராட்டுகள் பலவற்றைத் தனது அரிய சேவைகட்காகப் பெற்றுள்ளது. ரூேமாபுரியிலுள்ள இராயப்பர் மகாலயத்தில் நடைபெற்ற ஒரு வைபவத்தின் போது கருதினுல் தெட்சினி ஆண்டவரவர்கள் பேசுகையில் இந்த இருபதாம் நூற்ருண்டில் தேவதாயின் இருபெரும் சாதனங்களாக விளங்கும் லூர்து, பத்திமாபதி என்பவற்றுடன் மரியாயின் சைனியத்தையும் ஒப்பிடலாமெனப் புகழ்மாலை சாற்றினுர். அதிமேற்றிராணியார் றிபினி அவர்கள் மரியாயின் சைனியம் கன்னி மரியாயினுல் திருச்சபைக்கு அளிக்கப்பட்ட ஒரு பெரிய கொடை எனவும், இதுவே இந்த இருபதாம் நூற்ருண்டின் மிகப்பெரிய அற்புதம் எனவும் பாராட்டுரைகள் வழங்கியிருக்கிருர்.

ஆயினும், மரியாயின் சேனை ஈட்டிய மாபெரும் சிறப்பு, பொதுவுடைமையால் பொதியப்பட்ட சீனுவில் தான் பெறப்பட்டது. வேதகலாபனைக் காலத்தில் மரியாயின் சேனையாளர் காட்டிய வீரத்துவமிக்க செயல்களும், பொறுமையுடன் அனுபவித்த வேதனைகளும், இவற்றிலும் மேலாக இறைவனை மறுதலிக்க மறுத்து உயிர்துறந்ததும் திருச்சபையின் வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டியவைகள். சேனைகளை நிறுவிய அல்லது நிர்வாகித்த குற்றங்கட்காகக் குருக்கள் சிறைப்படுத்தப்பட்டனர். பல தண்டனைகளுமிடப்பட்டனர். மரியாயின் சேனை ஆரம்பிக்கப்பட்டபின்னர் சீனுவில்தான் அது எதிரிகளுடன் நேருக்குநேராகப் போராடித் தனது இரத்த ஞானஸ்நானத்தைப் பெற்றுக்கொண்டது.

இச் சைனியத்தையிட்டு அலட்சியமாயிருந்தோரனைவரும் சீனுவில் அதன் போராட்டத்தைக் கேட்ட பின்னர்தான் அதன் சக்தியை உணர்ந்தனர். எதிரிகள் வேதகலாபனை தொடங்குவதற்கு முன்னர் முதல் நடவடிக்கையாக மரியாயின் சைனியத்தையே தாக்கினர், தடைசெய்தனர் என்ற செய்திகள் உலகமடங்கிலுமுள்ள சேனையாளருக்குத் தாங்கள் செய்யும் அப்போஸ்தலிக்க தொண்டின் பெறுமதியை நினைவூட்டியது. அந்த உற்சாகமே இன்று உலகம்முழுவதிலும் சேனையின் வளர்ச்சியைத் தீவிரிக்கச் செய்தது எனலாம்.

இன்று வெள்ளிவிழாக் கொண்டாடும் இலங்கை மரியாயின் சேனையாளரை நாம் மகிழ்ச்சியுடன் வாழ்த்துகிருேம். இலங்கையில் சேனையின் வருங்காலம் பிரகாசமுடையதா அல்லது இருளடைந்ததா என்பதை இன்று வரையறுத்துச் சொல்லவியலாது. எல்லாம்வல்ல தேவன் சேனைக்கு மகிழ்ச்சிகலந்த நாட்களை அருளவேண்டுமென வேண்டுகிருேம். அவரின் சித்தத்துக்கிணங்க இன்னல்கள் எதிர்நோக்குமாயின் நமது சேனையாளரும் திருச்சபைக்கு உறுதியுடனும் பிரமாணிக்கத்துடனும் சேவையாற்றுவார்களென நம்புகிருேம்.

## சேனையின் பாதை

- 1921 பதினேழு அங்கத்தவருடன் டபிளின் நகரில் மரியாயின் சேனை ஆரம்பிக்கப்பட்டது.
- 1937 யாழ்ப்பாணத்தில் முதலாவது பிரெசீடியம் ஆரம்பமாயது.
- 1938 கொழும்பில் முதலாவது பிரெசீடியம் ஆரம்பிக்கப்பட்டது.
- 1939 I சகோதரி கோடன் ஸ்பென்ஸ் தலைமையில் கொழும்பு நிர்வாகசபை (கியூரியா) தொடக்கப்பட்டது.
  - II யாழ்ப்பாணத்தில் நிர்வாகசபையின் (கியூரியா) ஆரம்பம்.
- 1940 I கண்டியில் நிர்வாகசபை (கியூரியா) நிறுவப்பட்டது.
  - II கொழும்பு நிர்வாகசபை, மாகாண நிர்வாகசபையின் (கமிசியம்) அந்தஸ்துக்கு உயர்த்தப்பட்டது.
- 1947 கொழும்பு, புறக்கோட்டையிலுள்ள மாகாண நிர்வாக சபை, இலங்கை முழுவதற்குமான நிர்வாக குழுவின் (செனுத்துஸ்) அந்தஸ்துக்கு உயர்த்தப்பட்டது.
- 1951 I கைப்புத்தகம் சிங்களத்தில் மொழிபெயர்க்கப்பட்டது.
  - II கொழும்பில் சிங்கள மொழியினருக்கான முதலாவது கியூரியா நிறுவப்பட்டது.
  - III மருதமடுப்பதியில் முதலாவது பொதுச் சமாகமம் நடாத்தப்பட்டது.
- 1952 கண்டியில் சேனையினரின் சமாகமம்.
- 1954 I குருநாகல, காலி, சிலாபம் ஆகிய இடங்களில் கியூரியாக் குழுக்கள் அமைக்கப்பட்டன.
  - II கொழும்பில் தமிழ்மொழியினருக்கான முதலாவது கியூரியா நிறுவப்பட்டது.
  - III காலியில் சேனையினரின் சமாகமம்.
- 1956 இரண்டாவது பொதுச் சமாகமம் மருதமடுவில் நடத்தப்பட்டது.
- 1959 மட்டக்களப்பில் கியூரியா அமைக்கப்பட்டது.
- 1960 திருகோணமலையில் கியூரியா நிறுவப்பட்டது.
- 1962 சேனையின் வெள்ளியூபிலி விழா.

## மரியாயின் சேனைக் கேள்விச் சரம்

எமது வாசகர்கட்கும், சிறப்பாக மரியாயின் சேனையினருக்கும் சேனைபற்றிய அறிவை விர்த்தியாக்குமுகமாக இத்துடன் பன்னிரு விஞக்கள் தரப்படுகின்றன. நேயர்கள் இவற்றுக்காய விடைகளை மரியாயின்சேனைக் கேள்விச்சரம், சத்தியவேத பாதுகாவலன், மேற்றிராசன மாளிகை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவும். முடிவு தேதி: **29-7-62.**

1. மரியாயின்சேனைப் போதகர் (Tutor) என எப்புனிதர் அழைக்கப்படுகிருர்? ஏன்?
2. சைனியத்தின் பாதுகாவலர் வரிசையில் கடைசியாக நியமிக்கப்பட்ட அர்ச்சியசிஷ்டர் யார்?
3. சைனியத்தின் இரு சிறகுகள் (Wings) என அழைக்கப்படுபவை யாவை?
4. சேனைக்காக இணையற்றசேவையாற்றியவர்கட்காக வழங்கப்படும் கௌரவம் யாது?
5. மத்திய ஆபிரிக்காவில் சேனையின் விர்த்திக்காக அருந்தொண்டாற்றிய சேனையாளர் யார்?
6. மரியாயின் சைனியத்தினது நிறம் (Colour) யாது?
7. ஒரு பிரெசீடியத்தில் எத்தனை உத்தியோகத்தர்கள்(Office Bearers) உண்டு? அவர்களின் பெயர்களைத் தருக.
8. ஒரு தேசத்தில் மரியாயின் சேனைகளை நிர்வகிக்கும் தலைமைக்குழு எப்பெயரால் அழைக்கப்படுகிறது?
9. பொதுவாக மரியன்னையின் எத் திருநாளில் வருடாந்த வெளிவிழாக் கொண்டாடப்படுதல் வேண்டும்?
10. தங்களது பழைய உடைகளையும் பொருட்களையும் சேனையாளர் தருமசாலைகளில், அல்லது மருத்துவமனையில் விநியோகிக்கலாமா?
11. யாழ்ப்பாணத்தில் மரியாயின் சேனை நிர்வாகசபைகள் எங்கெங்கு அமைக்கப்பட்டுள்ளன?
12. சேனையின் துவஜம் எப்பெயரால் அழைக்கப்படுகிறது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரமாணிக்கமும் பரிசுத்த தனமுமுள்ளவர்கள் உருவாக்கப்படுதல் வேண்டும்

— யாழ்ப்பாண மேற்றிராணியார்



இன்று இலங்கையின் எல்லாப்பாகங்களிலும் மரியாயின் சேனைப் பிரெசீடியங்கள் காணப்படுகின்றன. இப்பெரெசீடியங்கள் மரியாயின் மூலமாக யேசுநாதசுவாமியின் வாழ்க்கையை மக்களுக்குப் பிரகாசிக்கின்றன.

இலங்கைத் திருச்சபைக்கு நீங்கள் ஆற்றிய சேவைகட்காக உங்களைப் பாராட்டுகிறோம். உங்கள் ஆத்தும இரட்சணிய வாஞ்சை பல்வேறுவழிகளில் காண்பிக்கப்படுகிறது. விசுவாசப் பரப்புதற்பணியில் இல்லறத்தவர்களின் தொண்டுகள் பெருங்கருமங்களைச் சாதிக்க முடியும். இவ்வுண்மைக்குக் கடந்த சிலவருடங்கள் சான்று பகரும்.

செஞ்சீனாவிலும் மற்றைய நாடுகளிலும் சேனைச்சகோதரர், சகோதரிகளில் விளங்கிய வீரதீரமும், பக்திவைராக்கியமும் உங்களை வழிநடாத்தட்டும். உங்கள் தொகை பலமடங்கு அதிகரிக்கவேண்டுமென்றும் ஞான மேய்ப்பர்கட்கு அமைச்சலும் பிரமாணிக்கமும் உள்ள, பரிசுத்ததனம் நிரம்பிய விசுவாசிகளை நீங்கள் உருவாக்க வேண்டுமென்றும் தேவனைப் பிரார்த்திக்கிறோம்.

தேவன் உங்களை இன்றும் என்றும் ஆசீர்வதிப்பாராக.

✠ **J. எமிலியானுஸ்பிள்ளை,**
யாழ்ப்பாண மேற்றிராணியார்.

மேற்றிராசன மாளிகை,
யாழ்ப்பாணம்.

## மரியாயின் சொந்தப் படையணி

— சிலாப மேற்றிராணியார்

மரியாயின் சேனை அங்கத்தவர்களின் வாழ்க்கை, கிறிஸ்துவின் சீவியத்தை ஒத்ததாக விளங்குதல் வேண்டும். இதற்கு அவரது அன்னையின் தூய வாழ்க்கைச் சரிதம் ஒரு உதாரணமாகும். அவ்வன்னை தனது புதல்வனின் அப்போஸ்தலர்களாக உங்களை அழைக்கிறாள். அவளுக்குச் சொந்தமான, அவளால் தெரிந்துகொள்ளப்பட்ட படையில் நீங்கள் அங்கம் வகிக்கின்றீர்கள்.

அறநெறியில் திட்டவட்டமாக ஒழுகும் ஆன்மவேலையாளர் நீங்கள். உங்களை நடாத்திச்செல்பவள் அப்போஸ்தலரின் இராக்கினி ஆவாள். மற்றையோரிலும் பார்க்க நன்மைசெய்வதற்கான் தகுதிகள் உங்களிடம் அதிகம் உண்டு. பலத்திலும் வளர்ச்சியிலும் நாளுக்குநாள் உங்கள் சைனியம் விர்த்தியாவதை நாம் மகிழ்ச்சியுடன் நோக்குகின்றோம். உங்கள் விசுவாசத்தில் திடனாயிருங்கள். உறுதி தளராதீர்கள்.



அன்னையின் உதவியுடன் திருச்சபைக்கு வெற்றியைக் கொண்டுவருபவர்களாக நீங்கள் விளங்குவீர்களாக.

✠ **எட்மண்ட் பீரிஸ்,** O. M. I.
சிலாப மேற்றிராணியார்.

மேற்றிராசன மாளிகை,
சிலாபம்.

## பெரியவேலை இப்போதுதான் தொடங்குகிறது

— கண்டி மேற்றிராணியார்



மரியாயின் சேனை ஒரு பெரிய தேவையைப் பூர்த்தியாக்கியிருக்கிறது என்பது மறைக்குமுடியாத உண்மை.

ஆயின் சேனையின் மிகப்பெரிய வேலை இப்போதுதான் ஆரம்பமாகிறது.

சேனையின் பலசாதனைகளை நாங்கள் அறிந்திருக்கிறோம். அவற்றை எண்ணி அகமகிழ்கிறோம். சேனையாளரின் தொண்டுகளைச் சுருங்கக்கூறின் மரியாயின் சேனை செயலாற்றும் ஒரு விசாரணைப் பங்குக்கும் சேனை இல்லாத வேறொரு விசாரணைப்பங்குக்கும் எவ்வளவோ வித்தியாசங்களைக் காணக்கூடியதாயிருக்கிறது.

சேனை தனது தொண்டுகளை அயராது மேற்கொண்டு வெற்றிமேல் வெற்றிகளை ஈட்டவேண்டுமென நல்லாசி கூறுகின்றோம்.

நல்லதேவன் உங்களனைவரையும் ஆசீர்வதிப்பாராக.

✠ **லீயோ நாணயக்காரா,**
கண்டி மேற்றிராணியார்.

மேற்றிராசன மாளிகை,
கண்டி.

## மரியாயின் சேனை

மரியாய் நாமம் மகிமை வாய்ந்தது
வல்லபம் வான மட்டா யுயர்ந்தது
மனுக்குலம் வாழ வரமருள் மாதா
வானவர் இராக்கினி மாநில இரட்சகி
மரியாய் சேனை மனிதனு லல்ல
ஆண்டவ னாலே ஆதியி லானது
அலகை கடிந்த அமல கன்னி
அவதரிக் குமுன்னே ஆக்கமும் பெற்றது
ஆதாம் ஏவை அன்றுபூங் காவில்
அமலனை மறந்தவர் கற்பனை கடந்து
பேயி னிச்சகப் பிதற்றலுக் கிணங்கி
விலக்கிய கனியை வேண்டிப் புசித்துப்
பாவத்தைச் செய்து பயந்திருந் தவேளை
பரமனுர் தோன்றிப் பசாசை யதட்டிப்
பாக்கிய கன்னிபா தமுன்தலை நசுக்கும்
என்ற போதே யெழுந்ததிச் சேனை!
பரம இராக்கினி படைபலம் கேளும்
தூய பார்வை சோதி வதனம்
மாசணு காதவெண் வீலிவென் றவுள்ளம்
கன்னியர்க் கணிகல கற்பலங் காரம்·
சாந்த மடக்கம் தாழ்மை சகிப்பு
இனிய வார்த்தை ஈர நெஞ்சம்
கரம்செப மாலை கைக்கொண் டெழுந்து
தன்னிக ரில்லாத் தளபதி யாகிப்
பாவம் பரந்து பரமனை மறந்து
பகைமிக வளர்ந்து முத்திவ ழிவிலகி
குருவைம தியாதுசீர் குலைந்த போதிற்
தேடி யுந்தன் சேவை வேண்டிச்
சேனை திரட்டும் திவ்விய தாய்க்கு
ஓர்பெரும் உதவி மரிகுண மாகி
நல்வழி தெரிந்து நடத்தையிற் காட்டி
நாடுகள் தோறும் நன்றுசெய் வீரே!!

## இலங்கையில் சேனை ஆரம்பகாலம்

— வண. பிதா பேர்னண், O. M. I.

**1939-ம் வருடத்தில் கொழும்புக் கியூரியா ஆரம்பிக்கப்பட்டபோது அதன் ஞானப்பரிபாலகராகக் கடமையாற்றிய குரவரவர்கள் அமெரிக்காவிலிருந்து அனுப்பியசெய்தி.**

பல வருடங்கட்கு முன்னர் புறக்கோட்டையிலுள்ள அர்ச். பிலிப்புநேரியார் ஆலயத்தில் மரியாயின் சேனையின் முதலாவது கியூரியா ஆரம்பிக்கப்பட்டது. அச்சிறிய குழு பின்னர் பலுகிப்பெருகி இலங்கையின் இரட்சணிய அலுவலில் மகத்தான வெற்றிகளைச் சாதிக்குமென அன்று யாரும் நினைத்திருக்கவில்லை. அக்காலத்தில் கொழும்பில் இரண்டு பிரெசீடியங்களே இயங்கின. அவற்றின் உத்தியோகத்தர்களான எண்மர் கியூரியாக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

அந்நாட்களில் யாழ்ப்பாணத்திலும் ஒரு பிரெசீடியம் இயங்கியது. இது சொற்பகாலத்துக்கு இந்திய சென்னைத் தூஸ் சபையுடன் இணைந்திருந்தது.

அக்காலத்தில் சேனை சிறந்தமுறையில் இயங்குவதற்குப் பல பிரச்சினைகள் தோன்றின. சிங்கள மொழியில் கைப்புத்தகம் இல்லாதது ஒரு பெருங்குறை. ஆயின், சேனையாளர் மத்தியில் காணப்பட்ட ஆர்வமும், பிரமாணிக்கமும், [illegible]துழைப்பும இக்குறையை [illegible]மாக ஒதுக்கிவிட்டன.

அன்று சேனையில் அங்கம் வகித்த சிங்களர், தமிழர், பறங்கியர், ஆங்கில, ஐரிஸ், ஸ்கொட், பிரான்சிய மக்களனைவரும் ஒன்றுதிரண்டனர். ஒருமனதுடன் மரியன்னையின் வழிகாட்டலில் அவள் தம் திருக்குமாரனின் இராச்சியம் தழைத்தோங்க அயராதுழைத்தனர்.

ஈழத்திருநாட்டில் சேனையை உருவாக்கும் பணியில் எனக்கும் ஒருபங்கு கிடைத்ததென்பதை எண்ணி ஆறுதலும் ஆனந்தமும் கொள்கிறேன். இலங்கைச் சைனியத்தினர் அனைவருக்கும்சிறப்பாக ஆரம்பகாலத்திலென்னுடன் ஒத்துழைத்தோருக்குமெனது பாராட்டுக்களையும் அன்புகலந்த நன்றியையும் சமர்ப்பிக்கின்றேன்.

சேனையின் களஞ்சியமான கைப்புத்தகம் காட்டும் பாதையில் தற்பரித்தியாகம் நிறைந்த பிறர்சிநேக ஊழியத்தில் அன்றுபோல் என்றும் சேனையாளர் அனைவரும் தொண்டாற்ற அமலன் அருளை வேண்டுகிறேன்.

**தேவன் சேனையாளர் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தன்னிடத்தில் இல்லாதவொன்றைப் பிறருக்குக் கொடுத்தல் இயலாது

— காலி மேற்றிராணியார்

இன்று மரியன்னை தனது சேனையாளராகிய உங்களனைவரையும் புன்முறுவலுடன் நோக்குகின்றாள். கடந்த காலத்தில் நீங்கள் சுயநலமற்ற பிறர் சிநேகக் கிருத்தியங்கள் பலவற்றைச் செய்திருக்கிறீர்கள். அவற்றின் விளைவாக ஈழத்தின் சகலபகுதிகளிலும் பலர் ஏராளமான இகபர நன்மைகளைப் பெற்றிருக்கின்றனர். உங்கள் உதவியால் பரமனின் பிரமாணிக்க பிள்ளைகளாக மாறியவர்களை நீங்கள் கண்டு மகிழ்வது தகுதியும் நீதியுமாகும்.

தன்னிடத்தில் இல்லாத ஒன்றைப் பிறருக்குக் கொடுத்தல் இயலாது. இதனைச்சைனியஅங்கத்தினர் நன்கறிந்துள்ளார்கள். எனவே ஒவ்வொரு சேனையாளும் தேவவரப்பிரசாதங்கள் நிரம்பிவழியும் பாத்திரமாக விளங்குதல் அவசியம். தன்னிடத்தில் இருப்பவைகளை மற்றவர்கட்கும் கொடுக்கட்டும். வரப்பிரசாதங்களின் பாத்திரம் வரண்டுபோயின் நீங்கள் செய்யுந் தொண்டுகளனைத்தும் பயனற்றுப் போகும்.

இறைவனதும், கன்னிமரியாளினதும் உதவியின்றி உங்களால் எதுவுமே செய்ய இயலாது. அவர்களுடன் ஒன்றித்தால் மிகப்பெரிய கருமங்களைச் சாதிக்கலாம். அத்தகைய காரிய சித்தியை உங்கள் ஒவ்வொருவருக்கும் மனப்பூர்வமாக விரும்புகிறோம்.

சேனைத்தொண்டுகள் நற்பலன் அளிக்குமாறு யேசுவின் திருவிருதயத்தையும் மாசில்லாத மாதாவையும் வேண்டிநிற்கிறோம்.

✠ N. M. லவுடாடியோ,
காலி மேற்றிராணியார்.

மேற்றிராசன மாளிகை,
காலி.

## மிகப்பெரிய கொடை மரியாயின் சைனியம்

— திரிகோணமலைமேற்றிராணியார்



மரியாயின் சேனை இலங்கையிலுள்ள கத்தோலிக்கு திருச்சபைக்குக் கிடைத்த மிகப்பெரிய கொடையாகும். மந்தையை விட்டுத் தூரச்சென்ற ஆடுகளைக் கண்டு பிடிப்பதிலும் அவற்றைப் பரிபாலிப்பதிலும், தங்கள் நேரத்தையும் ஆற்றலையும் உதவும் சேனையாளரின்றி இலங்கையிலுள்ள சொற்ப குருக்களால் எவ்விதம் மிகப்பெரிய இரட்சணிய அலுவல்களைச் செய்ய இயலும்?

கடந்த காலத்தில் சேனையின் சேவை மிக அவசியமாயிற்று. வருங்காலத்திலோ அதிகமதிகமாகத் தேவைப்படுகிறது. எமது பாடசாலைகள் பறிக்கப்பட்டன. திருச்சபை அதன் சத்துராதிகளின் பலமான தாக்குதல்கட்குள்ளாகிறது. ஆவலாதிகளும் அவதூறுகளும் கத்தோலிக்கர்களைச் சூழ்ந்து வருகின்றன. இந்நிலையில் கத்தோலிக்கர்கட்குத் தைரியமும் ஆலோசனையும் அளித்தல் அவசியம். கடந்தகாலத்தில் இவ்வேலையைப் பிரமாணிக்கமாகச் செய்துள்ள சேனையாளர் வருங்காலத்திலும் தொடர்ந்து செய்வர் என்பதில் ஐயமில்லை.

மரியாயின் ஏவுதலின்கீழ் அவளுக்காக மகத்தான காரியங்களில் தலையிடும் சேனையாளரை மனமார வாழ்த்துகிறோம். எதிர்காலத்திலும் எமது இராக்கினி தமது படையணியினரால் இன்னும் பெருங் கருமங்களைச் செய்தருள வேண்டுமெனப் பிரார்த்திக்கிறோம். எமது ஆசிகள் சேனையாளருக்கு உரியதாக.

✠ இக்னேசியஸ் கிளெனி,
திரிகோணமலை மேற்றிராணியார்.

மேற்றிராசன மாளிகை,
மட்டக்களப்பு.

## மரியாயின் வீரியம் சேனையின் உள்வைரம்

அர்ச். பத்தாம் பத்திநாதர் கருதினல்மாருடன் செய்த சம்பாஷணையொன்றில் ஓர் ஊரின் கத்தோலிக்க வைரத்தைக் கணிப்பதெப்படி என்று கேட்டகேள்விக்குப் பலரும் பலவாறு கூறினர். சிலர் கோவில்களின் பெருக்கமென்ன. மறுபேர் பாடசாலைகள், வேறுசிலர் சந்நியாச ஸ்தாபனங்கள் இப்படி ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமாய்க் கூறினர். இவர்கள் எல்லோரையும் அதட்டி உண்மையான அப்போஸ்தொலிக்க தொண்டு புரிபவர்கள் எத்தனைபேரோ அவ்வளவுக்குக் கிறிஸ்தவ ஞானச்சீவியம் துடிப்பாயிருக்கும் என்றார் பாப்பரசர். இச்சம்பாஷணையே கத்தோலிக்க சேவை என்னும் பரந்த இயக்கத்தின் முதல் வித்தாயிருந்தது என்கலாம். இந்த வித்து பிராங்க் டவ்ப் (Frank Duff) என்னும் அயர்லாந்து சிவில் உத்தியோகஸ்தரின் இருதயத்தில் விழுந்ததின் பயனே மரியாயின் சேனை என்னும் மாபெரும் இயக்கம்.

இவ்வியக்கம் **பரிசுத்ததனத்தின் இரகசியம்** என்னும் நாமம்பெற்ற அர்ச். கிறிஞ்ஞோன் டீ மொன்போட்டின் ஞானச்சீவியமுறையைத் தன் அஸ்திவாரமாய்க் கொண்டிருக்கிறது. அம்முறையின்படி அவ்வாத்துமம் தேவதாயாருக்கு முழுதும் சொந்தம். தேவதாயார் அவ்வாத்துமத்துக்கு முழுதும் சொந்தம்; மனுஷசுபாவம் இடங்கொடுப்பதற்குத்தக இவ்வாத்துமமும் தேவதாயாரும் இரண்டு பேரும் இரண்டுபேரல்ல ஒருவர். ஒரே மன ஏவுதல்கள்; ஒரேவிதமான மனப்பற்றுதலுடையோர்.

நாம் என்னத்தைக் கொடுக்கிறோம் என்றல்ல என்னவிதமாகக் கொடுக்கிறோம். நாம் என்னத்தைச் செய்வதல்ல என்னவாய் இருக்கிறோம். இதே பெறுமதியுள்ளது என்பது ஞானச்சீவியத்தின் சுலோகம். இச்சுலோகத்தின்படி சேனையாளன் மறு மரியாளாய் இருந்து மறு மரியாயைப்போல் தான் தொண்டுசெய்யும் சகலருக்களை மரியாயின் குமாரன் திவ்விய யேசு என்று மதித்துத் தொண்டுபுரியாவிடில் அவன் எவ்வித வீரியச்செயலைப் புரிந்தாலும் அவன் தொண்டு மரியாயின் சேனைத்தொண்டாய் இராது. ஆகவே, தன்னையும் தன் மனப்பான்மையையும், தனது ஞானச்சீவியத்தையும் தேவதாயாரின் அச்சின்படி திருத்தியமைப்பதே அவன் நாளாந்த பிரயாசையாய் இருக்கவேண்டும். கிறிஞ்ஞோன் டீ மொன்போட்டின் பரிசுத்ததனத்தின் இரகசியம் எனும் ஞானச்சீவியமுறை அவன் வழிகாட்டியாயும் மரியாயின் சேனைக் கைப்புத்தகம் அவனை உருவப்படுத்தும் கைக்கருவியாயும் இருந்துவருகிறது.

மரியாயின் சேனையாளன் ஒரு வீரிய போர்வீரன். ஆனால், அவன் வீரத்தனம் வெளி அட்டோலிக்கங்கொண்ட அநேக வீரியச்செயல்களைப்புரிவதில் விளங்குவதில்லை. அநேக பூசைகள் கண்டு ஒப்புக்கொடுத்து நற்கருணை அடிக்கடிபெற்றுவந்தும் அநேக செபமாலைகளைக் கோர்வையாய்ச் சொல்லியும் தன்னை மேற்கொள்ளாவிடில் அவன் சேனையாளன் அல்ல. தனது மனப்பான்மையைத் தற்காலம் தீவிரமாய் விரைந்து சுழரும் நீர்ச்சுழியுள் அகப்படவிட்டுவிடுவானாய் இருந்தால் அவன் சேனையாளன் அல்ல. அதெல்லாம் அந்தக்காலம் இது இந்தக்காலம் என்று சொல்லித் தனது ஞானச்சீவியத்தை நிலைதளரவிடுவானாகில் அவன் சேனையாழன் அல்ல. உலகமதிப்பு, உலகசெல்வம் செல்வாக்கு, பணஊதிபம், முகஸ்துதி, இனப்பாசம் முதலியன பெறுவதற்கு அவன் வெகுகாலம் தனது **சுபாவத்தோடு** போர்பொருதி அடைந்த ஞானப்பெலனை நழுவவிடுவானாகில் அவன் சேனையாளனுக்குரிய ஞானவைரத்தை இழந்து சோத்திபத்திப்போகிறான். அவன்பேச்சும் அவன் தொண்டும் முன்போல் ஆணித்தரமாய் மற்றவர்களின் இருதயத்தில் தைக்காது. அவன் காற்றுக்கு ஆடி அசையும் சருகுக்கு ஒப்பாகிறான். அவன் நெருப்புக்கு அல்லது குப்பைப்பிட்டிக்குத்தான் உதவுவான்.

அவனிருதயத்தில் ஆழமாய் வேரூன்றியிருக்கும் தேவதாயாரின் அட்சர அமைப்பு முதிர்ந்து கடினத்தால் வைரங்கொண்டு ஆழமாய் வேரூன்றிஸ்திரமாய் எதிர்க்கக்கூடிய மரத்தைக் காற்றுப்புசல் அசைத்து ஆட்டிப்புரட்டத் தெண்டிக்க அம்மரம் இன்னும் ஆழமாய் வேரூன்றிப் புதிய தளிர்கள் விட்டு ஓங்கிவளர்வதுபோல் அவனும் சோதனைகளிலும் சிலுவைகளிலும் மத்தியில் செழித்தோங்குவான். தற்கால வீறுகொண்ட நஞ்சுப்போக்கு அவனைத்தீண்டாது. ஆதித்திருச்சபையில் நெருப்போடும் வாளோடும் போர் பொருதும் தைரியத்தையும்—மத்திய யுகதிருச்சபையின் கல்வியறிவின் அகங்காரத்தை எதிர்த்த தாழ்மையையும் சிற்றின்பத்தை மேற்கொண்ட தூய்மையையும் தற்காலப்பேரவாவை மேற்கொள்ளும் மட்டசனத்தையும்இருதயங்களுக்கு [illegible] திறம்பெறச்செய்தது ஒரே கிறிஸ்துதான். பூர்வீக தைரிய கிறிஸ்துவுக்கும், மத்திய யுக தாழ்மையுள்ள தூய கிறிஸ்துவுக்கும், தற்கால மட்டசனக் கிறிஸ்துவுக்கும் ஒரு வித்தியாசமும் இல்லை—எல்லாம் ஒரே கிறிஸ்துதான். இந்தக் கிறிஸ்துவைத் தான் தன்னைப் பூரணமாய் மரியாய்க்குக் கையளித்த சேனையா[illegible] இருதயத்தில் மரியாய் உருவப்படுத்துகிறாள். இத்தகைய சேனையாளன் எந்தச் சந்தர்ப்பத்திலும் வெற்றிகரமான மரிய வீரியங்கொண்ட வெற்றிவீரன்—இவனே உண்மையான சேனையாளன்.

## மரியாயின் சேனை வெள்ளியூபிலி விழா

காலம்: 29 ஆடி 1962.
இடம்: அர்ச். பெனடிக்ற் கல்லூரி, கொழும்பு.

### நிகழ்ச்சி நிரல்

காலை:
9-00 கல்லூரி மண்டபங்களில் மொழிவாரியாகப் பிரிதல்: ஆரம்ப செபங்களும், செபமாலையும்.
9-15 சொற்பெருக்கு: "அன்னையின் சேவையில் இருபத்தைந்து வருடங்கள்"
9-45 தேநீர் இடைவேளை.
10-15 அதிமேற்றிராசனக்கோவிலில்நன்றியறிதற்பூசை மகாவந். அதிமேற்றிராணியார் அவர்கள் தலைமை தாங்குவர்
12-00 மதிய உணவும், இளைப்பாற்றியும்.

பி.பகல்:
2-00 கலந்துரையாடல் "அயலவரின் அவதானிப்பில் நாம்"
3-30 சொற்பெருக்கு: "ஒரு சேனையாளரிடமிருந்து எதிர்பார்க்கப்படுவது யாது?"
4-00 தேநீர் இடைவேளை.
4-30
I அர்ச். பெனடிக்ற் கல்லூரிமைதானத்தில் ஒன்றுகூடுதல்.
II ஆசனக்கோவில் மைதானத்தை நோக்கி ஊர்வலமாகச் செல்லுதல்.
III விசுவாசப் பிரமாண உச்சாடனம்
IV திவ்விய சற்பிரசாத ஆசீர்வாதம்
V முடிவு செபங்கள்.

துர்மாதிரிகை ஒரு முட்டையைப் போன்றது; அது பொரித்தவுடன் அதற்குச் சிறகுகள் வந்துவிடுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org